27.05.15

**வேளாண் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு அட்டவணை வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும் அதன் இணைப்பு, உறுப்புக் கல்லூரிகளிலும் இளம் அறிவியல் பிரிவில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல் உள்ளிட்ட 6 படிப்புகளும், இளம் தொழில்நுட்பப் படிப்புகளில் உயிர்த் தொழில்நுட்பவியல், உயிர்த் தகவலியல் உள்ளிட்ட 7 படிப்புகளும் வழங்கப்படுகின்றன.

2015-16-ஆம் கல்வி ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் மே 15-ஆம் தேதி முதல் ஜூன் 13-ஆம் தேதி வரையிலும் இணையதளம் மூலம் விநியோகம் செய்யப்பட்டன. மொத்தமுள்ள 2,340 இடங்களுக்கு 29,942 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்ட நிலையில், வேளாண்மைப் படிப்புக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த 20-ஆம் தேதி வெளியிடப்பட்டது. இதையடுத்து பொதுப் பிரிவு கலந்தாய்வுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஜூன் 29-ஆம் தேதி முதல் ஜூலை 6-ஆம் தேதி வரையிலும் காலை 8.30 மணி, பிற்பகல் 2 மணி என கலந்தாய்வு நடைபெறவுள்ளது. தினமும் சுமார் 200 பேர் வரையிலும் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கலந்தாய்வின் முதல் நாளில், முற்பகலில் 199.75 முதல் 197.75 மதிப்பெண் வரையிலும் கட்-ஆஃப் மதிப்பெண் பெற்றவர்களும், பிற்பகலில் 197.75 முதல் 197 வரை கட்-ஆஃப் மதிப்பெண் பெற்றவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். ஜூலை 7-ஆம் தேதி முற்பகலில் காலை 8.30 மணிக்கு பிற்பட்டோர், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறவுள்ளது. முன்னதாக சிறப்புப் பிரிவினருக்கான கலந்தாய்வு ஜூன் 26 (சனிக்கிழமை) தொடங்கி இரு நாள்கள் நடைபெறவுள்ளது.

**உழவர் தின விழா: விவசாயிகளுக்கு ரூ.76.30 லட்சம் வங்கிக் கடனுதவி**

பொள்ளாச்சி பாங்க் ஆப் பரோடா வங்கிக் கிளை சார்பில் கொண்டாடப்பட்ட உழவர் தின விழாவில் 45 விசாயிகளுக்கு ரூ. 76.30 லட்சம் கடனுதவி வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இவ்வங்கியில் நடைபெற்ற உழவர் தின விழாவுக்கு, கிளையின் முதுநிலை மேலாளர் முருகையா தலைமை வகித்தார். கோவை மண்டல அலுவலக முதன்மை மேலாளர் நெடுமாறன் முன்னிலை வகித்தார். இதில், பயிர்க் கடன், தோட்டக்கலைப் பயிர்களுக்கான கடன், மாடு வளர்ப்பு, பால்பண்ணை வைத்தல், பண்ணை வீடு அமைத்தல் உள்பட பல்வேறு வகையான விவசாயக் கடன்கள் குறித்தும், கடன் பெறும் முறை குறித்தும் விவசாயிகளுக்கு வங்கி அதிகாரிகள் விளக்கினர். இதில், 45 விவசாயிகளுக்கு ரூ. 76.30 லட்சம் கடன் வழங்கப்பட்டது.

இதில், செழுமை உழவர் மன்றம் உள்பட இரு உழவர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு, 20 விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். உழவர் மன்றங்களின் மூலமாக விவசாயிகள், வங்கித் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

விழாவில், முன்னோடி விவசாயிகள் தனபால், ஜெயப்பிரகாஷ், அமிர்தலிங்கம், பிரபு, மனோகரன் உள்பட 50-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். வங்கியின், விவசாய அதிகாரி ஆரிபா, இணை மேலாளர்கள் விஜய், அம்ருத்ராஜ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**ஜார்க்கண்டில் விவசாய ஆய்வு மையம்: பிரதமர் நாளை அடிக்கல்**

ஜார்க்கண்ட் மாநிலம், ஹசாரிபாக் மாவட்டத்தின் பர்ஹி பகுதியில் இந்திய விவசாய ஆய்வு மைய (ஐஏஆர்ஐ) வளாகத்துக்கு, ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 28) பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுகிறார்.

இதுகுறித்து மத்திய விவசாய அமைச்சகம், தில்லியில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பர்ஹியில் கோரியா கர்மா கிராமத்தில் அமையவுள்ள இந்திய விவசாய ஆய்வு மையத்துக்கு பிரதமர் மோடி, வரும் 28ஆம் தேதி அடிக்கல் நாட்டவுள்ளார்.

இந்தக் கல்வி நிறுவனத்தில், முதுகலை பட்டப்படிப்புகள், முனைவர் பட்டங்கள் தொடர்பான படிப்புகள் கற்பிக்கப்படும். மேலும், இயற்கை வள மேலாண்மை, பயிர் வளர்ச்சியும் பாதுகாப்பும், தோட்டக்கலையும் வனவியலும் ஆகிய மூன்று பிரிவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

விவசாயம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கும், பிராந்திய சவால்களை சமாளிப்பதற்கான வளர்ச்சித் திட்டங்களுக்கும் இந்தக் கல்வி நிறுவனத்தில் ஊக்கம் அளிக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறப்பு: மேட்டூரை வந்தடைந்தது காவிரி நீர்**



கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு வெள்ளிக்கிழமை வந்தது.

கர்நாடகத்தில் பெய்து வரும் பருவமழையால், அங்குள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து காவிரியில் புதன்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இந்த தண்ணீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக ஒகேனக்கல்லுக்கு வியாழக்கிழமை மாலை முதல் வரத் தொடங்கியது. இதையடுத்து, காவிரி ஆற்றில் நொடிக்கு 1,250 அடியாக இருந்த நீர்வரத்து, வெள்ளிக்கிழமை காலை 10,500 கன அடியாக அதிகரித்தது. இது மாலையில் நொடிக்கு 13,500 கன அடியானது. இந்த நிலையில், ஒகேனக்கல் அருவிகளுக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்கக் கூடும் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காவிரி ஆற்றில் கடந்த சில நாள்களாக தண்ணீர் வரத்து வெகுவாகக் குறைந்து ஊட்டமலை, முதலைப் பண்ணைப் பகுதி, ஐந்தருவி உள்ளிட்ட இடங்களில் காட்சியளித்த பாறைகள் தண்ணீரில் மூழ்கின. கபினி அணையில் இருந்து நொடிக்கு 25 ஆயிரம் கன அடி திறந்துவிடப்பட்ட

நிலையில், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூரை வந்தடைந்தது: இரண்டு நாள்களில் வந்து சேரவேண்டிய தண்ணீர், காவிரி வறண்டு கிடந்ததால் ஒருநாள் தாமதமாக வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு வந்தது. மேட்டூர் அணைக்கு நொடிக்கு 1,417 கன அடியாக இருந்த நீர்வரத்து வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நொடிக்கு 10,386 கனஅடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 74.55 அடியாக இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக நொடிக்கு 1,001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 36.70 டி.எம்.சியாக இருந்தது. நீர்வரத்து இதேநிலையில் நீடித்தால் இரண்டு வாரங்களில் மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிடும் வாய்ப்புள்ளதாக விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

கடந்த ஆண்டும் மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத காரணத்தால், பாசனத்துக்காக ஆகஸ்ட் 10-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நிகழாண்டில் சற்று முன்னதாக தண்ணீர் திறக்கும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கர்நாடக அணைகள் நிலவரம்: கபினி அணைக்கு வெள்ளிக்கிழமை நீர்வரத்து நொடிக்கு 30 ஆயிரம் கன அடியாக உள்ள நிலையில், அணையில் இருந்து நொடிக்கு 25 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில்

**தோட்டக் கலை திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்**

தோட்டக் கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் ஜூன் 29 முதல் ஜூலை 4 ஆம் தேதி வரை தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடைபெற உள்ளது.

தோட்டக் கலைத் துறை செயல்படுத்தும் தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத்

திட்டம் போன்றவற்றுக்கு வட்டார அளவில் விழிப்புணர்வு முகாம் நடைபெறுகிறது. இதில் அந்த திட்டங்களுக்கான விண்ணப்பங்களும் விநியோகம் செய்யப்படும். முகாம் நடைபெறும் தேதி மற்றும் வட்டாரம் விவரம்:

ஜூன் 29- மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, ஜூன் 30- அலங்காநல்லூர், வாடிப்பட்டி, ஜூலை 1- மேலூர், கொட்டாம்பட்டி, ஜூலை 2- செல்லம்பட்டி, உசிலம்பட்டி, ஜூலை 3- சேடப்பட்டி, தே.கல்லுப்பட்டி, ஜூலை 4- திருப்பரங்குன்றம், திருமங்கலம், கள்ளிக்குடி.

**கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத்தொகை வழங்க ஆட்சியர் உத்தரவு**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகைகளை உடனடியாக வழங்க தனியார் கரும்பு ஆலை நிர்வாகத்துக்கு வெள்ளிக்கிழமை ஆட்சியர் உத்தரவிட்டார். மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாச்சலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் செ.பொன்னம்மாள், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், விவசாயிகள் சார்பில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகள்: கோம்பையில் மின் வாரிய ஊழியர்கள் பற்றாக்குறையால் பராமரிப்பு பணிகளில் தேக்கம் ஏற்பட்டு விவசாய மின் இணைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. அரண்மனைப்புதூர், முல்லைநகர் பகுதியில் விவசாய நிலங்களை ஒட்டியுள்ள பகுதியில் ஊராட்சி நிர்வாகம் குப்பை கழிவுகளை கொட்டுவதால் மண் வளம் மற்றும் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது.

அகமலை, கண்ணக்கரை, மருதயனூர் இணைப்புச் சாலைகள் அமைக்க வேண்டும். மயிலாடும்பாறை பகுதியில் மூல வைகை ஆற்றின் குறுக்கே

தடுப்பணைகள் கட்டவும், மூல வைகை நதியில் சிற்றாறுகள் கலக்கும் இடங்களில் மண் அரிப்பை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காமயகவுண்டன்பட்டி கேசவபுரம் கண்மாயை தூர்வார வேண்டும். குள்ளப்புரம் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த விலையையும், வெட்டப்பட்ட கரும்புக்குரிய நிலுவைத் தொகையையும் உடனடியாக வழங்க வேண்டும். வங்கிகளில் விவசாயக் கடன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், திசு வாழை சாகுபடியில் விலை குறைவால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு சாகுபடி பரப்பளவை கணக்கிட்டு அரசு நிவாரணம் வழங்க வேண்டும். பருவ நிலை மற்றும் தேவைக்கு ஏற்ப பயிர் சாகுபடி செய்வது குறித்து வேளாண்மைத் துறை ஆலோசனை வழங்க வேண்டும் என்றனர். இ-பொதுச் சேவை மையங்கள் மூலம் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் மற்றும் சிரமம் உள்ளதாக பெரும்பாலான விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

ஆட்சியர் கூறியது: அகமலை, கண்ணக்கரை இணைப்புச் சாலை அமைக்கவும், மூல வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டவும் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகைகளை சர்க்கரை ஆலை நிர்வாகம் உடனடியாக வழங்க வேண்டும். இந்தப் பிரச்னை குறித்து மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் தலையிட்டு உரிய தீர்வு ஏற்படுத்த வேண்டும்.

வேளாண்மை உற்பத்திப் பொருள்களின் விலை சரிவை தடுக்க விவசாயிகள் ஒரே மாதிரியான பயிர் சாகுபடியில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். தேவை மற்றும் உற்பத்தி அடிப்படையில் விளை பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கப்படுவதால், பயிர் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி திறன் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். பயிர் சாகுபடி பரப்பை சம்மந்தப்பட்ட பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலரிடம் விவசாயிகள் பதிவு செய்து கொள்ள

வேண்டும். இது குறித்து புதிய நடைமுறையை விவசாயத் துறை அதிகாரிகள் உருவாக்க வேண்டும். இ-பொதுச் சேவை மூலம் ஏற்பட்டுள்ள நடைமுறை சிரமங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்றார்.

**தரமற்ற உணவுப் பொருள்கள் பறிமுதல்**

காஞ்சிபுரம் நகரில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. காஞ்சிபுரம் நகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெயச்சந்திரன், உணவுப் பாதுகாப்பு அலுவலர் ராமகிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர் சதீஷ் சாய்நாத் உள்ளிட்டோர் சின்னகாஞ்சிபுரத்தில் வெள்ளிக்கிழமை திடீர் ஆய்வு நடத்தினர். அப்போது பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளில் உள்ள தேநீர், மளிகை, எழுதுபொருள், தின்பண்டங்கள் போன்றவை விற்பனை செய்யப்படும் கடைகளில் ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது பல்வேறு கடைகளில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பாக்குகள், புகையிலைப் பொருள்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர். மேலும், தயாரிப்புத் தேதி குறிப்பிடப்படாத நொறுக்குத் தீனிகள், குளிர்பானங்கள், கலப்பட டீத்தூள் உள்ளிட்டவையும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து, கலப்பட டீத் தூள் குறித்து கடைக்காரர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், அதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் அதிகாரிகள் எடுத்துக் கூறினர். இதைத் தொடர்ந்து, தரமற்ற பொருள்களை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவற்றை குப்பைக் கிடங்குக்கு கொண்டு சென்று போட்டனர். இதுபோன்ற பொருள்களை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடைகளின் உரிமையாளர்களுக்கு துண்டுப் பிரசுரங்களை அளித்தனர்.

**திடீர் சோதனை ஏன்?**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வி நிலையங்கள் உள்ள பகுதிகளில் தரமற்ற உணவுப் பொருள்கள் விற்பனை நடைபெறுவது தொடர்பாக, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகத்திடம் புகார் மனு அளிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், கல்வி நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ள கடைகளில் விற்பனை செய்யப்படும் தரமற்ற உணவுப் பொருள்கள், தின்பண்டங்கள், புகையிலைப் பொருள்களை உள்ளாட்சி, உணவு பாதுகாப்புத் துறைகளின் அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வே.க. சண்முகம் உத்தரவிட்டிருந்தார். இதன்படி, காஞ்சிபுரம் நகரில் ஆய்வு நடைபெற்றது. இதையடுத்து, மாவட்டம் முழுவதும் ஆய்வு நடத்தப்படலாம் என அலுவலர்கள் கூறினர்.

திறந்துவிடப்படுகிறது. கிருஷ்ணராஜ சாகர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 28,248 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து 8,204 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**காளான் வளர்ப்புக்கு தயாராகும் வைக்கோல் உருளை**

கோபி பகுதியில் காளான் வளர்ப்புக்காக விவசாயிகள் வைக்கோல் உருளைகளை தயார் செய்து வருகின்றனர்.

கோபி பகுதியில், நெல் அறுவடைக்கு போதிய ஆள்கள் கிடைக்காத நிலையில், விவசாயிகள் இயந்திரங்களைக் கொண்டு அறுவடைப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இயந்திரங்கள் மூலமாக, நெல் அறுவடை முடித்த பின்னர் வயல்களில் சிதறிக் கிடக்கும் வைக்கோலை மற்றொரு இயந்திரத்தின் மூலம் வைக்கோல் உருளைகளாக மாற்றுகின்றனர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வைக்கோல் உருளைகளை காளான் வளர்ப்புக்கும், பீங்கான் பொருள்கள் பேக்கிங் செய்யவும்

பயன்படுத்தப்பட்டு வருகிறது. சேதாரமான வைக்கோல் கழிவுகளால் இப்பகுதி விவசாயிகளுக்கு வருமானம் கிடைத்து வருகிறது.

**ஈமு கோழி நிறுவன வாகனங்கள் ரூ. 28 லட்சத்துக்கு ஏலம்**

ஈரோட்டில் ஈமு கோழி நிறுவனங்களில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஏலம் விடப்பட்டதில், ரூ. 28 லட்சத்து 10 ஆயிரத்துக்கு விற்பனையானது.

ஈரோடு மாவட்டம், பெருந்துறையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்த ஈமு கோழி நிறுவனங்கள் கவர்ச்சிகரமானத் திட்டங்களை அறிவித்து பொதுமக்களிடம் இருந்து கோடிக்கணக்கில் முதலீடுகளைப் பெற்று மோசடியில் ஈடுபட்டன.

இதுதொடர்பான வழக்குகள், கோவையில் உள்ள தமிழ்நாடு முதலீட்டாளர்கள் பாதுகாப்பு நல சிறப்பு நீதிமன்றத்தில் (டான்பிட்) நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நீதிமன்ற உத்தரவின்பேரில், மோசடியில் ஈடுபட்ட ஈமு கோழி நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துகள் வெள்ளிக்கிழமை ஏலம் விடப்பட்டன. கோபியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட டிவிஎஸ் ஈமு, பெருந்துறை சுசி ஈமு, சக்தி ஈமு, கோபி கேஜி ஈமு ஆகிய 4 நிறுவனங்களுக்குச் சொந்தமான 13 வாகனங்கள், தளவாடப் பொருள்கள் உள்ளிட்டவை ஏலம் விடப்பட்டன. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சதீஷ் முன்னிலையில் இவை ஏலம் விடப்பட்டன. ஏலத்தில் 93 பேர் பங்கேற்றனர். இதில், 12 வாகனங்கள் மட்டும் விற்பனையாகின. இதன் மூலம் மொத்தம் ரூ. 28 லட்சத்து 10 ஆயிரம் கிடைத்தது.

**நீலகிரியில் தொடர் மழை: வேகமாக நிரம்பும் அணைகள்**

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், உதகையில் உள்ள நீர்த்தேக்கங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தென்மேற்குப் பருவமழை வலுத்து வருகிறது. இதில், உதகையில் உள்ள நீர்த்தேக்கங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. உதகை நகருக்கும், வெலிங்டன் ராணுவ மையத்துக்கும் குடிநீர் விநியோகிக்கும் பிரதான நீர்த்தேக்கமான பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 15 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. கீழ்தொட்டபெட்டா மற்றும் கோடப்பமந்தில் நீர்த்தேக்கத்தில் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. அதேபோல, நகரில் உள்ள ஏனைய நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சூறாவளிக் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்து வருவதால் பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் விழுந்துள்ளன. மின் விநியோகம் தடைபட்டுள்ளதால் குடிநீர் விநியோகமும் தொடர்ந்து 4-ஆவது நாளாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் நகராட்சி லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை வரை பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): அப்பர் பவானி 110, அவலாஞ்சி 98, தேவாலா 57, கூடலூர் 38, நடுவட்டம் 37, குந்தா 16, உதகை மற்றும் கிளன்மார்கனில் தலா 15, எமரால்டு 12, கேத்தி, கெத்தையில் தலா 3, கல்லட்டி 2 என மாவட்டத்தில் 406 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

**தேயிலை வாரியத்திற்கு ரூ.1400 கோடி நிதி**

இந்திய தேயிலை வாரியத்திற்கு மத்திய அரசு சார்பில் 12-ஆவது 5 ஆண்டு நிதித் திட்டத்தின்கீழ், ரூ. 1400 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேயிலை வாரிய செயல் இயக்குநர் சி.பால்ராசு தெரிவித்துள்ளார்.

தென் இந்திய தேயிலை வாரியத்தின் புதிய செயல் இயக்குநராகப் பொறுப்பேற்ற சி.பால்ராசு கூறியதாவது: பச்சைத் தேயிலை விலையை நிர்ணயிப்பதில் உற்பத்தியாளர்கள், ஏலதாரர்கள் என பலரின் பங்களிப்பும் அவசியமாக உள்ளதால் இவர்கள் அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பச்சைத் தேயிலைக்கு உரிய விலை கிடைக்க தரமான இலைகளை மட்டுமே பறிக்க வேண்டும். தேயிலைத் தோட்டங்களை முறையாகப் பராமரித்து, கவாத்து செய்ய வேண்டும்.

இமாசலப் பிரதேசத்தில் தேயிலைத் தோட்டங்களை விற்பவரிடம் இருந்து அரசே நிலத்தை கொள்முதல் செய்யும் சட்டம் உள்ளது. இதுபோன்ற சட்டம் இங்கும் அமலாக்கப்பட்டால் தேயிலை எஸ்டேட்டுகள் அழிந்து வருவதை காப்பாற்ற முடியும்.

இதுகுறித்து, மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

தேயிலை வாரியத்திற்கு தற்போது கிடைத்துள்ள ரூ. 1400 கோடி நிதி மூலமாக தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாடு, அவர்களின் வாரிசுகளுக்கு தொழிற்கல்வி, மானியங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்தப்படவுள்ளது. விவசாயிகள் கலர் கலக்காத தேயிலைகளை மட்டுமே மக்களுக்கு வழங்க வேண்டும்.

தேயிலையின் தரத்தை கடைக்காரர்கள் உறுதி செய்ய வேண்டும். கலப்படத்தை முற்றிலும் அழிக்க வேண்டும் என்றார்.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்**

ராணிப்பேட்டை திருமலை கெமிக்கல்ஸ் நிறுவனம் சார்பில் உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விழிப்புணர்வு முகாம் பூட்டுத்தாக்கு அரசு மேல்நிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.

இந்த முகாமில் திருமலை கெமிக்கல்ஸ் நிறுவனத் தலைவர் பி.எம்.சி.நாயர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஒய்.குமார், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் அம்புரோஸ், திருமலை கெமிக்கல்ஸ் நிறுவன மேலாளர் ஆர்.நரேஷ், நிறுவன பணியாளர் மேலாளர் வி.கோதண்டராமன், நிறுவன சுற்றுச்சூழல் பொறியாளர் சேமபிரசாத், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக பள்ளி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக் கண்காட்சி, ஆவணப் படங்கள் காட்சிபடுத்தப்பட்டது. இதையொட்டி மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் தொடர்பான ஓவியம், கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

**அமராவதி அணை திறப்பு: 7,520 ஏக்கர் பாசன வசதி**

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதன் மூலம் உடுமலை, மடத்துக்குளம் வட்டங்களில் உள்ள பழைய ஆயக்கட்டின் 7,520 ஏக்கர் ஆயக்கட்டுப் பாசன விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 55 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன

வசதி பெற்று வருகின்றன. மேலும், இந்த அணையின் நீர் 100-க்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் பழைய, புதிய ஆயக்கட்டுப் பகுதிகளின் பாசனத்துக்காவும், குடிநீர் தேவைக்காகவும் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதைத்தொடர்ந்து, வறட்சி காரணமாக கடந்த மார்ச் மாதத்தில் அமராவதி அணையின் நீர் மட்டம் குறைந்தது.

இந்நிலையில், அமராவதி அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளான சின்னாறு, தேனாறு, பாம்பாறு ஆகியவற்றில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டியது. இதையடுத்து, பழைய ஆயக்கட்டின் குறுவை சாகுபடி பாசனத்துக்காக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து, அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கான தண்ணீரை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து வைத்தார்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அமராவதி அணையில் இருந்து வினாடிக்கு 300 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் உடுமலை, மடத்துக்குளம் வட்டங்களில் உள்ள பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளான ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்கார், கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய பகுதியில் உள்ள 7,520 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். 120 நாள்களுக்கு சுழற்சி முறையில் 1,944 மில்லியன் கனஅடி தண்ணீர் திறந்து விடப்படும் என்றனர்.

இதில், உடுமலை கோட்டாட்சியர் அ.சாதனைக்குறள், வட்டாட்சியர் எஸ்.சைபுதீன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் தர்மன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அணையின் நிலவரம்:

90 அடி கொள்ளளவு கொண்ட அணையில் வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி, 70.44 அடி நீர் இருப்பு காணப்பட்டது. அணைக்கு வரத்தாக 1,686 கனஅடி வந்து கொண்டிருந்தது.

**கரும்பு பிழிதிறன் குறைந்தால் விலையைக் குறைக்கக் கூடாது**

சர்க்கரை ஆலைகளில் பிழிதிறன் குறைவைக் காரணம் காட்டி கரும்புக்கான விலையைக் குறைக்கக் கூடாது என விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் வெள்ளிக்கிழமை ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி பேசியது: தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அரைவைக்காக விவசாயிகளிடம் பெறப்படும் கரும்பில் பிழிதிறன் குறைவதாகக் கூறி கரும்புக்கான விலையை அதிகாரிகள் குறைக்கின்றனர்.

விவசாயிகளிடம் உரிய நேரத்தில் கரும்பு வெட்ட ஆணை வழங்காமல் காலதாமதமாக உத்தரவு வழங்குகின்றனர். அதனால் பிழிதிறன் குறைகிறது. இதற்கு விவசாயிகள் காரணம் இல்லை. எனவே, கரும்புக்கான விலையைக் குறைக்கக் கூடாது என வலியுறுத்தினார். இதே கருத்தை கரும்பு விவசாயிகள் பலரும் வலியுறுத்தினர்.

கிருஷ்ணாபுரம் அருகே பன்னிக்குளத்தில் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும் தனியார் கோழிப்பண்ணை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அந்தப் பகுதியில் துப்புரவுப் பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்திலுள்ள ஏரிகளை தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தூர்வார வேண்டும்.

எல்லப்புடையாம்பட்டி தடுப்பணை, வள்ளிமதுரை நீர்த்தேக்கம் ஆகியவற்றிலிருந்து ஏரிகளுக்கு நீர் வர அவற்றைத் தூர்வாரி பழுது ஏற்பட்டுள்ள மதகுக் கதவுகளை சீர்படுத்த வேண்டும் என வலியுறுத்தினர்.

இதற்கு ஆட்சியர் பதிலளித்துப் பேசியது: கரும்பு பிழிதிறனைக் காரணம் காட்டி விவசாயிகளுக்கு விலை குறைத்து வழங்கக் கூடாது. இது தொடர்பாக சர்க்கரை ஆலை அதிகாரிகள் உரிய நேரத்தில் கரும்பு வெட்ட ஆணை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இது குறித்து விவசாயிகளிடம் கலந்தாய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். பன்னிக்குளம் கோழிப்பண்ணை விவகாரம் குறித்து துப்புரவுப் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டத்திற்கு வராத அதிகாரிகள்: தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாதம் ஒரு முறை விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடைபெறும். இதில் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் புகார்கள் குறித்து பதிலளிப்பர்.

ஆனால் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், சர்க்கரை ஆலை அதிகாரிகள் சிலர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மற்றும் பவர் கிரிட் அதிகாரிகள் வருகை தர வில்லை. இதனால் அத்துறை தொடர்பான புகார்கள் குறித்து உரிய விளக்கங்கள் அளிக்கப்படவில்லை.

இதனால் விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு அனைத்து அதிகாரிகளும் வருகை தர வேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அ.சங்கர், வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) வேணுகோபால், கோட்டாட்சியர்கள் மேனுவல்ராஜ் (தருமபுரி), சகிலா (அரூர்) மற்றும் அரசு அலுவலர்கள், விவசாயிகள் சங்கப் பிரதிநிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## 120 விவசாயிகளுக்கு கடன் வழங்க இலக்கு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2015- 2016-ஆம் ஆண்டில் நாட்டுக் கோழி வளர்க்க 120 விவசாயிகளுக்கு மானியத்துடன் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விவசாயத்துக்கான மின் இணைப்பு, நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகளிடமிருந்து 110 மனுக்கள் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். குறைதீர் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பேசியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2015-2016-ஆம் ஆண்டில் 120 பயனாளிகளுக்கு நாட்டுக் கோழி வளர்ப்பதற்கு மானியத்துடன் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆர்வம் உள்ள விவசாயிகள், அருகே உள்ள கால்நடை மருத்துவமனைகளில் விண்ணப்பித்து இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பசுமைக் குடில் அமைக்கப்பட்டதற்கு வழங்கப்படாமல் உள்ள மானியம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சூளகுண்டா பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்றார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் சபா நடேசன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் எஸ்.வி.கே.ராஜேந்திரன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**"இயற்கையை அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும்'**

இயற்கையை அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்தை அனைவரின் மனத்திலும் விதைக்க வேண்டும் என்று, பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சுவாமிநாதன் தெரிவித்தார். பெரியார் பல்கலைக்கழக சுற்றுச்சூழல் அறிவியல் துறை, உள்தர மேம்பாட்டு மையம் இணைந்து இந்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் பள்ளி, கல்லூரி மாணவ - மாணவியருக்கு பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. முதல் கட்டத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ - மாணவியருக்கு இறுதிப் போட்டிகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இந்தப் போட்டிகள் புவி வெப்பமயமாதல், அதன் விளைவுகள், மண் வளப்பாதுகாப்பு, காடுகள் வளர்ப்பின் முக்கியத்துவம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் எனும் தலைப்புகளில் நடைபெற்றன. ஆறு பிரிவுகளாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு ரூ.72 ஆயிரம் மதிப்பிலான பரிசுத் தொகையை துணைவேந்தர் சி.சுவாமிநாதன் வழங்கிப் பேசி யது: இயற்கை சார்ந்த பிரச்னைகள் குறித்து இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில், இதுபோன்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. நம் முன்னோர் நமக்கு வழங்கியுள்ள இயற்கையை சிதைத்து விடாமல், அடுத்த தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டியதின் அவசியத்தை அனைவரும் உணர வேண்டும் என்றார். இந்த நிகழ்ச்சியில், புல முதன்மையர் ஆர்.பழனிவேல், பேராசிரியர்கள் ஆர்.பாலகுருநாதன், எஸ்.கண்ணன், கே.முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ஏற்காட்டில் சாமை விதைப்புத் திருவிழா**

ஏற்காட்டில் சாமை விதைகளை மண்ணில் தூவி சாமை விதைப்புத் திருவிழாவை தொடக்கிவைத்தார் மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் சாந்தா ஷீலா நாயர். சேலம் மாவட்டம், ஏற்காடு வாழவந்தி ஊராட்சியில் மலைக் கிராம மக்கள் மண்ணில் சாமை விதைப்பு திருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் சாந்தா ஷீலா நாயர் பேசியது: மாநிலத்தில் முதல் முதலாக இந்தக் கிராமத்தில் திட்டம் தொடக்கிவைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இது செயல்படுத்தப்படவுள்ளது. இந்தக் கிராமம் திட்டத்தை முன்மாதிரியாக செயல்படுத்திக்காட்ட வேண்டும். கிராம பெண்களுக்கு இரும்புச் சத்துக் குறைவாக உள்ளது. இதனைப் போக்க சத்தான சிறுதானியங்களை பெண்கள் உணவாக உண்ண வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் ரூ.5 கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. ஏற்காடு ஒன்றியம் பின் தங்கிய ஒன்றியமாக உள்ளது, இதனை முன்னோடி ஒன்றியமாக மாற்றிக் காட்ட வேண்டும்.

தமிழக அரசு 2016-ஆம் ஆண்டுக்குள் மாநிலம் முழுவதும் எல்லோரும் கழிப்பறையை பயன்படுத்தவேண்டும் என்று திட்டம் தீட்டி செயல்படுத்தி வருகிறது என்றார். இந்த விழாவில் புதுவாழ்வுத் திட்டம், அமுத சுரபிக் கடன் திட்டம், வேளாண்மை துறை சார்பில் நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

இந்த விழாவில் மாநில திட்ட இணை இயக்குநர் செல்வராஜ், வேளாண்மை இணை இயக்குநர் என்.இளங்கோ, மாவட்ட துணை இயக்குநர் ஜெகன்மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், விழாவில் திட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தியூர் என் ஸ்ரீராம், ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் நாகேஷ்வரி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்

சி.அண்ணாதுரை, துணைத் தலைவர் சுரேஷ், வாழவந்தி ஊராட்சித் தலைவர் கோவிந்தன், கிராம மலைவாழ் மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**பள்ளியில் ஆய்வு**

ஏற்காட்டில் மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் சாந்தாஷீலா நாயர், அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் உள்ள பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளியைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, பள்ளிக் குழந்தைகளிடம் வீடுகளில் கழிப்பறை உள்ளதா எனக் கேட்டார். இதில் பெரும்பாலான குழந்தைகள் இல்லை என கைகளை உயர்த்தினர். இதையடுத்து, ஆசிரியர்களிடம் குழந்தைகளின் பெற்றோர் வீடுகளில் கழிப்பறை கட்ட வலியுறுத்துமாறு கற்றுக்கொடுங்கள் என்றார். மேலும், பள்ளிக் குழந்தைகளுக்கு தேவையானதை செய்து கொடுக்க அரசு தயாராக உள்ளது என்றார்.

**குறுவை சாகுபடி திட்டப் பயனை அனைவருக்கும் வழங்க வேண்டும்**

குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டப் பயனை அரியலூர் மாவட்ட விவசாயிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் ஆட்சியரக கூட்டரங்கில் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

பூ. விஸ்வநாதன்: பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 7 ஆயிரம் என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக மின்இணைப்புக்காக காத்திருப்போருக்கு விரைந்து மின் இணைப்பு வழங்க வேண்டும். கோக்குடி ஏரி உள்ளிட்ட ஏரிகளை தூர்வாரவும், ஆறுகளில் தடுப்பணை கட்டவும் அரசு நிதி ஒதுக்கீடு நிலுவையில் உள்ளதை ஆட்சியர் விரைவில் பெற்றுத் தர வேண்டும். மேலும்,

கோக்குடி - ஆங்கியனூர் சாலையை தார்ச்சாலையாக சீரமைக்க வேண்டும். திருமானூர், தா. பழூர் ஒன்றியங்களுக்குள்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் தமிழக அரசின் சிறப்புத் திட்ட பயன்களை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பி.விஸ்வநாதன்: மணப்பத்தூர் ஊராட்சியில் சுகாதாரமான குடிநீரை வழங்கிட வேண்டும். மணப்பத்தூர் ஊராட்சியில் அபாயகரமான நிலையில் உள்ள மின்கம்பங்கள் மற்றும் மின்சார வயர்களை உடனடியாக மாற்றவும், பசுந்தாள் உரம் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஜெகநாதன்: போதிய பருவமழை இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ள முருங்கை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். ஏரிகளில் வண்டல் மண் எடுக்க அனுமதிக்க வேண்டும். காமரசவல்லி ராஜேந்திரன்: கோவிந்தபுரம் கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள் தவணை கட்ட மேலும் 2 மாதம் கால நீட்டிப்பு செய்ய வேண்டும். மண் பரிசோதனை குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மின்இணைப்பு கேட்டு காத்திருக்கும் தோட்டப்பயிர் விவசாயிகளுக்கு உடனே இணைப்பு வழங்கிட வேண்டும்.

வாரணவாசி கி.ராசேந்திரன்: கோத்தாரி சர்க்கரை ஆலை மூலம் 2014-15 ஆம் ஆண்டில் வர வேண்டிய நிலுவைத் தொகை 50 கோடி ரூபாய். அரசு அறிவித்த விலை ரூ. 2,550 க்கு பதில் ரூ. 2,300 மட்டுமே விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர் நிலுவைத் தொகை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**ரூ.33.95 லட்சம் மதிப்பில் குறுவை தொகுப்பு உதவித்திட்டம்**

அரியலூர் மாவட்டத்தில் ரூ. 33.95 லட்சம் மதிப்பீட்டில் குறுவை தொகுப்பு உதவித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்றார் ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு 2015ஆம் ஆண்டில் குறுவை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தித் திறனை இரு மடங்காக உயர்த்திடவும், இதன் மூலம் விவசாயிகளின் லாபத்தை மும்மடங்காக உயர்த்திட குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தினை செயல்படுத்திட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் திருமானூர், தா. பழூர், ஜயங்கொண்டம் வட்டாரங்களில் இத்திட்டம் ரூ. 33.95 லட்சம் மதிப்பீட்டில், பின்வரும் மூன்று திட்ட உட்பிரிவுகள் வாரியாக செயல்படுத்தப்படவுள்ளது.

இதில் குறுவை நெல் சாகுபடியை இயந்திர நடவு மூலம் மேற்கொள்ள உத்தேசித்து, இயந்திர நடவுக்கு நாற்று விடும் விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக நெல் நடவு செய்து கொடுக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் 770 ஏக்கரில் நடவு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

குறுவை சாகுபடியில் நெல் நுண்ணூட்டச்சத்து மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்திட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 315 வீதம் 4 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கு நேரடியாக விவசாயிகளின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் வரவு வைத்திடவும் உத்தரவு பெறப்பட்டுள்ளது.

களர் பிரச்னை உள்ள நிலங்களில் சாகுபடிக்கு ஏக்கர் ஒன்றுக்கு 200 கிலோ என்ற அளவில் ஜிப்சம் விலை எதுவுமின்றி 1500 ஏக்கர் பரப்புக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகளின் பட்டியல் அந்தந்த பகுதி வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களில் தயார் செய்யப்பட்டு வருகிறது. எனவே குறுவை சாகுபடி மேற்கொண்டுள்ள மற்றும் மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் அரசின் மானியத்தை பெற்றிட வேளாண் விரிவாக்க மையங்களில் முன்னுரிமைப் பதிவேட்டில் தங்களது பெயரை பதிவு செய்திடவும், விண்ணப்பங்களை பூர்த்தி செய்து

கொடுத்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

**குறுவை சாகுபடி திட்டத்தில் பயன்பெற மாத இறுதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்**

குறுவை சாகுபடித் தொகுப்பு உதவித் திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள் இம்மாத(ஜூன்) இறுதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

ஆட்சியரக அலுவலகக் கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது: தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ள குறுவை சாகுபடி தொகுப்பு உதவி திட்டத்தில் பயன் பெற விரும்பும் விவசாயிகள், இயந்திரம் மூலம் நெல் நடவு, நுண்ணூட்டச் சத்து மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்துதல் மற்றும் விலையில்லா ஜிப்சம் வழங்குதல் ஆகியவற்றிற்கென உள்ள விலையில்லா விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஜூன் மாத இறுதிக்குள் ஒப்படைக்க வேண்டும் என்றார் அவர். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், வேளாண் இணை இயக்குநர் (பொ) மனோகரன், திட்ட இயக்குநர் (பொ) சாமுவேல் இன்பதுரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு முறைகேடுகளுக்கு இடமின்றி இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் முறைகேடுகளுக்கு இடமின்றி இழப்பீடுத் தொகை வழங்க வேண்டுமென புதுகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் சு. கணேஷ் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் (பொ) சதானந்தம், மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் கே.வி.எஸ்.

குமார், முன்னோடி வங்கி மேலாளர் சுலைமான், நபார்டு வங்கி வளர்ச்சி அதிகாரி எஸ். சோமசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பேசியதாவது:

வே. துரைமாணிக்கம்: பயிர் காப்பீடு செய்தவர்களுக்கு காப்பீடு தொகை வழங்கும் பணி தீயத்தூரில் சரிவர நடக்கவில்லை. சில இடங்களில் முறைகேடுகள் நடந்துள்ளன. இதுகுறித்து உரிய விசாரணை தேவை. கிராம உதவியாளரை பணியிடை நீக்கம் செய்வது மட்டும் பிரச்னைக்கு தீர்வாகாது. இதற்கு உடந்தையாக இருந்தது யார் என்பதை உடனடியாக கண்டறிந்து முறைகேடுகள் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும். இதே கருத்தை பெரும்பாலான விவசாயிகள் வலியுறுத்தினர்.

கூட்டுறவு மண்டல இணைப் பதிவாளர் கே.வி.எஸ். குமார்:மாவட்டத்தில் பயிர்காப்பீடு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடுத் தொகை பிரச்னையின்றி வழங்கப்படுகிறது. அதில் தீயத்தூரில் எழுந்துள்ள பிரச்னை குறித்து ஆட்சியரின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தாணிராமசாமி: மேட்டூர் அணை திறப்புக்கு முன்பு தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும். மாநிலத்தில் நீர்நிலைகள் நிறைந்த மாவட்டங்களில் புதுகை மாவட்டம் 3ஆவது இடத்தில் உள்ளது இதைக் கவனத்தில் கொண்டு தூர்வாருதல், ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஜி.எஸ். தனபதி: மாவட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் வேளாண் பாடத் திட்டங்களை கல்வித் துறை நிர்வாகத்துடன் பேசி அமல்படுத்த வேண்டும். ஆண்டுக்கு 40 ஆயிரம் மின் இணைப்பு வழங்கப்படுவதாக அரசு அறிவித்துள்ள நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்துக்கான ஒதுக்கீடு எத்தனை என்பதை மின் வாரியம் தெளிவுபடுத்த வேண்டும்.

சி. அப்பாவுபாலாண்டார்: புதுக்கோட்டையில் 43 ஏக்கர் பரப்பளவில் உள்ள சந்தைப்பேட்டையில் ஒருங்கிணைந்த தினசரி மார்க்கெட் அமைக்க வேண்டும். எஸ். செல்லத்துரை: பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்களுக்கு பேசுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

ராமதீர்த்தார்: கோட்டூர், விரையாச்சிலை பகுதிகளில் தைலமரங்கள் அகற்றும் நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது. மேலப்பனையூர் கண்மாய் நீர்ப்பிடிப்புகளில் வழங்கியுள்ள பட்டாக்களை ரத்து செய்ய வேண்டும்.

சர்தார் ஆண்டப்பா: அண்டக்குளம் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை தூர்வாரக்கோரி பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வருகிறோம். ஆனால், மழைகாலம் தொடங்கும் முன்னதாக நடவடிக்கை எடுத்தால் நீர் ஆதாரம் உயர வழிகிடைக்கும். மதுரை அருகே மேலூர் பகுதியில் உள்ள நிலங்கள் திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் கோயிலுக்கு சொந்தமானது என நீதிமன்றம் கூறியுள்ளதால் அவற்றை கையப்படுத்துவதற்கு கோயில்கள் நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா, இல்லையெனில் மாவட்ட நிர்வாகம் கையகப்படுத்த தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

**"உழவர் மன்ற உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்கப்படும்'**

வெளிமாவட்டத்தில் உள்ள பண்ணைகளை பார்வையிட்டு உழவர் மன்ற உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் புதுக்கோட்டை மாவட்ட நபார்டு வங்கிப் பொது மேலாளர் சோமசுந்தரம். பொன்னமராவதி அருகே உள்ள ஆலவயல் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற உழவர் மன்ற தொடக்க விழாவுக்கு சங்கத் தலைவர் பழனிச்சாமி தலைமை வகித்தார். முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் அ. அழகப்பன் முன்னிலை வகித்தார். புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் பால்வடிவு பங்கேற்று

ஆலவயல், கண்டியாநத்தம், செம்மலாபட்டி ஆகிய பகுதிகளில் மூன்று உழவர் மன்றங்களை திறந்து வைத்தார். விழாவில் பங்கேற்ற நபார்டு வங்கிப் பொது மேலாளர் சோமசுந்தரம் உழவர் மன்ற செயல்பாடுகள் குறித்துப் பேசியது: ஒரு உழவர் மன்றத்துக்கு ரூ. 10 ஆயிரம் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள் மற்ற பகுதிகளுக்கு கள ஆய்வு செய்வதற்கு இந்த நிதி வழங்கப்படுகிறது. அதன் பின்னர் இந்த குழுக்களின் வளர்ச்சி மற்றும் செயல்பாடு ஆய்வு செய்யப்பட்டு அதிகப்படியான நிதி மற்றும் விவசாயக் கருவிகள் வாங்க வங்கி மூலம் ஏற்பாடு செய்யப்படும். வெளிமாவட்டத்தில் உள்ள பண்ணைகளை பார்வையிட்டு உழவர் மன்ற உறுப்பினர்களின் வளர்ச்சிக்கு பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விழாவில் மத்திய கூட்டுறவு வங்கியின் முதன்மை மேலாளர் செல்வராசு, பொதுமேலாளர் கண்ணையா, சரக மேற்பார்வையாளர் முருகேசன் ஆகியோர் பேசினர். ஊராட்சித்தலைவர்கள் ஆலவயல் அ.ராஜாமணி, கண்டியாநத்தம் ப.முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**குறுவைத் தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தல்**

அனைத்து விவசாயிகளும் குறுவைச் தொகுப்பு திட்டத்தில் பயன்பெறுமாறு செய்ய வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

நாகையில் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. இதில் விவசாயிகள் பேசியது: எரவாஞ்சேரி குரு. கோபிகணேசன்: ஜூன் 15-க்கு பிறகு நடவு செய்தவர்களுக்கே நடவு மானியம் என்பதை தளர்த்த வேண்டும். பல இடங்களில் முன்கூட்டியே நடவுப் பணிகள் முடிந்துவிட்டன.

எனவே இதற்கு தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளை வழங்க வேண்டும். எனவே குறுவை சாகுபடி செய்த அனைவருக்கும் அதாவது இயந்திரங்களினால் நடவு செய்தவர்கள் மட்டுமல்லாமல், கை நடவு செய்த விவசாயிகளுக்கும் நடவு மானியம் வழங்க வேண்டும்.

சீர்காழி சீனிவாசன்: உழவர் பாதுகாப்பு திட்ட உரிய விவரங்கள் விவசாயிகளை முழுமையாக சென்றடையவில்லை. எனவே இதுகுறித்து தெளிவான விவரங்களை சம்பந்தபட்ட அலுவலர்கள் அளிக்க வேண்டும்.

வேதாரண்யம் காளிராஜன்: வேதாரண்யம் பகுதியில் ஏரிகள் தூர்வார வேண்டும். மேலும் இந்த பகுதிகளில் சவ்வூடு மணல் அள்ளப்படுவதால் குடிநீர் வளம் குறைகிறது. இதைத் தடுக்க வேண்டும்.

நாகை நடராஜன்: மாவட்டம் முழுவதும் எலி ஒழிப்பு முகாம் நடத்தப்பட வேண்டும்.

வேதாரண்யம் முஜிபூர்: அனைத்து இடங்களில் உள்ள பழுதடைந்த சட்ரஸ்களை மாற்ற வேண்டும். அத்துடன் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், பொதுப்பணித் துறை அலுவலகங்களில் உள்ள மழை அளவு பதிவு செய்யும் கருவிகளையும் சரி செய்ய வேண்டும்.

வேதாரண்யம் எஸ். சம்பந்தம்: வேதாரண்யம் பகுதியில் கடந்த ஆண்டுக்குரிய பயிர் காப்பீட்டுத் தொகை, கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல வணிக வங்கிகளில் இதை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழ்வேளூர் தனபாலன்: கிராமப்புற டீ கடைகளில் உள்ள டீ தூளில் பெருமளவு கலப்படம் உள்ளது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது நாகை பகுதியில் மண் குவாரிக்கு அனுமதி அளித்துள்ளதாக தெரிகிறது. இதற்கு அனுமதி அளிக்கக் கூடாது. தேவையான உரங்கள் கையிருப்பில் உள்ளன: ஆட்சியர்

குறைதீர் கூட்டத்தில ஆட்சியர் பேசியது: நடப்பு பருவ நெல் குறுவை இதுவரை 27,272 ஹெக்டர் நடவு முடிவடைந்துள்ளது. மொத்தம் குறுவையில் 28777 ஹெக்டர் நடவு எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டத்தில் 2015-16 குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தின்கீழ் காவிரி பாசன பகுதியில் நெல் இயந்திர நடவு செய்ய 20,000 ஏக்கர் இலக்கு பெறப்பட்டு வேளாண் பொறியியல் துறை மூலம் இதுவரை 464.9 ஏக்கர் நடவு பணி முடிவடைந்துள்ளது.

நடப்பு பருவ குறுவை நெல், கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு தேவையான ரசாயன உரங்கள் யூரியா 2360 மெ.டன்னும், டி.ஏ.பி. 1934 மெ.டன்னும், எம்.ஓ.பி.1142 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 410 மெ.டன்னும் கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார்.

**950 டன் சன்ன ரகநெல் அரைவைக்காக சிவகங்கைக்கு அனுப்பிவைப்பு**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்திலிருந்து 950 டன் சன்னரக நெல் சிவகங்கைக்கு அரைவைக்காக சரக்கு ரயிலில் வெள்ளிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

ஆதனூர், மூவாநல்லூர், அசேஷம், தலையாமங்கலம் மற்றும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து 75 லாரிகளில் சன்னரக நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை கொண்டு வரப்பட்டது.

இவற்றை தொழிலாளர்கள் சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றி சிவகங்கைக்கு அனுப்பிவைத்தனர். நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் முன்னிலையில் இந்த பணி நடைபெற்றது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென் மாவட்ட அளவில் முதல் 'வாழைச்சந்தை'




மதுரை:தென் மாவட்ட அளவில் சிவகங்கை வி.மலம்பட்டி வாழைச்சந்தை, 35 ஆண்டுகளாக வாழை விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாக விளங்கி வருகிறது. இங்கிருந்து வாழைத்தார்கள் வெளி மாநிலங்களுக்கு பெருமளவு அனுப்பப்படுகிறது.தமிழக அளவில் வாழை விவசாயத்தில் தேனியை அடுத்து மதுரை உள்ளது. லாபமோ, நஷ்டமோ வா◌ைழயடி வாழையாக வாழையை மட்டுமே சாகுபடி செய்யும் விவசாயிகள் மாற்று விவசாயத்திற்கு மாற விரும்புவதில்லை. வாழை இலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைத்தண்டு, வாழை நார், வாழை கழிவுகளில் இயற்கை உரம், என வாழையில் அனைத்தும் பயன்படுகிறது.

நெல் மண்டி, பூ மண்டி போல் வாழை மண்டி இல்லை. ஆங்காங்கே சிறு விவசாயிகள் ஏலம் மூலம் வாழையை விற்று வருகின்றனர். மதுரை மாவட்டம் மேலூரை சேர்ந்த வாழை விவசாயி கே.ஆர்.கண்ணன் என்பவர் 35 ஆண்டுகளுக்கு முன் தென் மாவட்ட அளவில் முதல் முறையாக வி.மலம்பட்டியில் வாழைக்கு சந்தை அமைத்தார். இன்றளவும் இது புகழ் பெற்று விளங்குகிறது. வாரம் தோறும் செவ்வாய், வெள்ளியில் வாழைச்சந்தை நடக்கும். குறைந்தபட்சம் 20 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை வாழைத்தார்கள் கைமாறுகிறது. வாழைக்கடை ஊழியர் குமரப்பன் கூறியதாவது: ராமநாதபுரம் முதல் தென்காசி வரை உள்ள வாழை வியாபாரிகள் செவ்வாய், வெள்ளியில் மாலை 4 மணிக்கு கூடுவர். வாழை விவசாயிகளிடம் இருந்து வாழைத்தார்களை கடனுக்கு பெற்று செல்வர். அடுத்த வாரம் பணம் தருவர். எங்களுக்கு பத்து சதவீதம் கமிஷன் கொடுப்பர்.மாணிக்கம், வாழை விவசாயி, சருகுவலையபட்டி: தேனியில் பழங்களை பாதுகாப்பதற்காக அரசின் குளிரூட்டப்பட்ட கட்டடம் பயன்பாடு இன்றி உள்ளது.

வி.மலம்பட்டி வாழைச்சந்தைக்கு குளிரூட்டப்பட்ட கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வழைக்கு நல்ல விலை கிடைக்கும். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாது.

கண்ணையா, வாழை விவசாயி, சருகுவலையபட்டி: நாட்டு ரகம், ஒட்டுரகம், செவ்வாழை, ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பூவன் பழங்களின் விலை குறைந்துள்ளது. தார் ஒன்று வெறும் ரூ.50, இலை கட்டு ரூ.100 என விற்கிறது. அரசே விலை நிர்ணயம் செய்தால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாது. வாழைக்கழிவுகளை இயற்கை உரமாக மாற்றும் தொழில்நுட்ப வசதியும் இல்லாததால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

## தமிழகத்தில்இன்று இடியுடன் மழை

சென்னை: தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் 24 மணி நேரத்திற்குள் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என வானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## முல்லைபெரியாறுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கூடலூர்: முல்லைப்பெரியாறு நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. ஒரே நாளின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து தற்போது 125 அடியாக உள்ளது. அணைக்கு வரும் நீரின் அளவு 3,838 கன0 அடியில் இருந்து 5,968 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர் இருப்பு 3, 704 மில்லியன் கன அடியாக உள்ளது. அணையிலிருந்துஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

## பிலிகுண்டுலுவிற்கு நீர்வரத்து அதிகரித்து

பெங்களூரு : கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரித்துள்ளது. பிலிகுண்டுலுவிற்கு விநாடிக்கு 15,000 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

**மண், உரம் இன்றி பசுந்தீவனம் உற்பத்தி:மாதவரத்தில் கால்நடை துறை சாதனை**




மண், உரம், பூச்சிக்கொல்லி மருந்தின்றி, குறைந்த அளவு நீரில் குளிர்சாதன பசுமைக் குடிலில், சிறு, குறு விவசாயிகள், பண்ணையாளர்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான, சத்தான பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் தொழில்நுட்ப சாதனையை, தமிழக கால்நடை துறை துவக்கி உள்ளது.விவசாயம் வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில், கால்நடைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் உடல் நிலைக்கு தேவையான, தீவன உற்பத்தியையும் மேம்படுத்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இறைச்சிக்கு அடிமாடுகளாக, கால்நடைகளை விற்கும் அவலமும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

ரியல் எஸ்டேட் பிடியில்...கால்நடை வளர்ப்பில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளில் தலையாயது, தீவனம். வயல்கள், ரியல் எஸ்டேட் நபர்களின் கைகளில் சிக்கி, மனைகளாக மாறிக் கொண்டிருக்கும் சூழலில், தீவனத்திற்கு என, தனியாக, பயிரிடும் நிலத்தை தக்க வைப்பது, சிரமமாக உள்ளது.இந்த நிலையில் தான், கால்நடை துறையின் சாதனை முயற்சியாக 'பசுந்தீவனம் பசுமைக்குடில்' திட்டம், சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சோதனை முறையில்...சென்னை மாதவரம் பால்பண்ணையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பண்ணை உள்ளது. அங்கு மண், உரம், பூச்சிக்கொல்லி மருந்தின்றி கால்நடைகளுக்கு தேவையான சத்தான பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் பசுமைக்குடில், கடந்த, 20ம் தேதி, அமைக்கப்பட்டது.

அதில், பசுந்தீவன பயிர்கள் பற்றி சோதனை முறையில் செய்து பார்க்கப்பட்டது. நிலையில், இந்த சோதனை முயற்சி வெற்றியடைந்து உள்ளதாக, ஆராய்ச்சி பண்ணை தலைமை பேராசிரியர் டென்சிங் ஞானராஜ் தெரிவித்தார். எவ்வாறு பயிரிடப்படுகிறது?

குடில், தேசிய வேளாண்மை மேம்பாட்டு

திட்டத்தின் கீழ், 28.85 லட்சம் ரூபாய் செலவில், 300 சதுர அடி பரப்பில் அமைந்துள்ளது. அதில் நான்கு பெட்டிகள் உள்ளன.

ஒரு பெட்டியில், 80 தட்டுகள் வீதம், மொத்தம், 320 தட்டுகள் உள்ளன.

அவற்றில், 132 கிலோ விதைகள் பயிரிடப்படுகின்றன.

மக்காச்சோளம், தினை, காராமணி போன்றவற்றை இந்த முறையில் பயிரிட முடியும். தட்டுகளில் உள்ள பயிர்கள், தண்ணீரில் தான் வளர்கின்றன. தட்டுகளில், மண், உரம்,

பூச்சிக் கொல்லி மருந்து என, எதுவும் இடப்படுவதில்லை.

அந்த தண்ணீரில் வேறு எந்த ரசாயனப் பொருளும் சேர்க்கப்படவில்லை.

பயிர்களின் வளர்ச்சி மொத்தம், 8 நாட்கள். அதற்குள் அவை, 25 முதல் 30 செ.மீ.,

உயரத்திற்கு வளரும். குடிலில், பகலில், சூரிய வெளிச்சம் உள்ளே வரும்படி, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இரவில், புறச்சிவப்பு கதிர்கள் உமிழும், விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

குடில் அறையின் வெப்ப நிலை, 25 டிகிரி

செல்சியஸ் ஆகவும், காற்றின் ஈரப்பதம்

85 முதல் 90 சதவீதமாகவும் இருக்கும்.

ஒரு நாளைக்கு, 20 முதல் 25 யூனிட் மின்சாரம், குடிலை இயக்க தேவைப்படும். பயன்கள் என்ன?

ஜெனரேட்டர் பயன்படுத்தினால், 30 யூனிட் வரை ஆகும்.

ஒரு கிலோ பசுந்தீவனம் உற்பத்திக்கு, 2 முதல் 3 லிட்டர் தண்ணீர் போதுமானது. ஆனால் நிலத்தில், 80 முதல் 90 லிட்டர் தண்ணீர் தேவைப்படும்.

எட்டாவது நாள் இறுதியில், 900முதல்,1,000 கிலோ வரை, பசுந்தீவனம் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக 1.65 கிலோ மக்காச்சோள விதை முளைத்தால், 10 கிலோ எடை பசுந்தீவனம் கிடைக்கும்.

பசுந்தீவனத்தில், புரதச்சத்து 8ல் இருந்து 14 சதவீதமாக அதிகரித்திருக்கும். இதனால் இனப் பெருக்க தன்மை மேம்படும்.

1,000 கிலோ பசுமைக்குடில் பசுந்தீவனத்தை கொண்டு, 35 பசு அல்லது எருமை மாடுகள் அல்லது 500 ஆடுகளை, ஆண்டு முழுவதும் பராமரிக்கலாம்.

சுத்தமான குளிர்சாதன சூழலில் உற்பத்தியாகும் பசுந்தீவனத்தால், கால்நடைகளுக்கு உடல் நலம் பாதிப்பும் தவிர்க்கப்படும்.

ஆண்டு முழுவதும் தரமான பசுந்தீவனத்தை, தொடர்ச்சியாக உற்பத்தி செய்ய முடியும். சேமித்து வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதில் பயன்படும் தண்ணீரை மறு சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

குளிர்சாதன பெட்டக குடிலில் சுத்தமான சூழலில் வளரும் இந்த பசுந்தீவனப் பயிர்கள் சுவையானதாகவும், கூடுதல் புரதச்சத்து நிறைந்ததாகவும் இருக்கும். இதனால் கால்

நடைகள் விரும்பி உண்ணும். அவற்றுக்கான மொத்த தீவன செலவில் 30 முதல் 40 சதவீதம் குறைந்து விடும்.

சிறு, குறு விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கு, பசுந்தீவன பசுமைக்குடில், பாதுகாப்பான முதலீடாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

150 கிலோ பசுந்தீவன உற்பத்தி முதல் 1,000 கிலோ வரை, உற்பத்தி செய்யும் குடில்களை, வசதிக்கு ஏற்றாற்போல் அமைத்துக் கொள்ள முடியும்.கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பண்ணையாளர்களுக்கு, இந்த தொழில்நுட்பம் வரவேற்புக்குரிய உதவியாக இருக்கும். தொடர்புக்கு: 044 - 25551571 - நமது நிருபர் –

## விதை விற்பனை நிலையத்தை ஜே.டி., ஆய்வு

நாமக்கல்:விதை உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களை, கோவை விதைச்சான்று இயக்குனரக விதை ஆய்வு இணை இயக்குனர் சுந்தர் ஆய்வு செய்தார்.நாமக்கல் மாவட்டத்தில் உரிமம் பெற்று இயங்கி வரும் மசக்காளிப்பட்டி மற்றும் அத்தனூர் ஆகிய இடங்களில் உள்ள தனியார் விதை உற்பத்தி நிலையங்களை, கோவை விதை ஆய்வு இணை இயக்குனர் சுந்தர், சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்திரராஜன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.விதைப்பண்ணை மூலம் உற்பத்தி செய்து கொள்முதல் செய்யப்பட்டு சான்று செய்யப்பட்டு இருப்பு வைக்கப்பட்டுள்ள, பல்வேறு நெல் ரகங்களின் விதைக் குவியல்களை ஆய்வு செய்து, உரிமையாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கினர். இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை பட்டியல் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.மேலும், இருப்பு வைக்கும் முறைகள், பராமரிக்கும் வழிமுறை குறித்து ஆலோசனை வழங்கினர். பேளுக்குறிச்சி துணை வேளாண் விரிவாக்க மையம், தனியார் விதை விற்பனை நிலையங்களையும் ஆய்வு செய்து அறிவுரை வழங்கினர். நாமக்கல் விதை ஆய்வாளர் கந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாய பணிக்கு ஊராட்சிகள் மூலம் தொழிலாளர்களை பெறலாம் : குறைதீர் கூட்டத்தில் தகவல்**

தேனி: தேனி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பொன்னம்மாள், வேளாண் இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன், துணை இயக்குனர் ரங்கநாதன் முன்னிலை வகித்தனர்.

கலெக்டர்: முதல்போக சாகுபடிக்கு பெரியாறு அணையில் போதுமான நீர் உள்ளது. தேவைக்கு ஏற்ப உரம் இருப்பு உள்ளது. விவசாயிகள் வேப்பம் புண்ணாக்கு போன்ற இயற்கை உரங்களை அதிகம் பயன்படுத்திட முன்வர வேண்டும். 17 வகை பூச்சி மருந்துகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மருந்துகளை தவிர்க்க வேண்டும். உதயசூரியன், அரண்மனைப்புதூர்: அரண்மனைப்புதூர் விவசாய நிலம் உள்ள பகுதிகளில் ஊராட்சி குப்பை கொட்டுவதை தடுக்கவேண்டும். இதே பகுதியில் வனத்துறை, வருவாய் துறை இடங்களில் என மக்களை ஏமாற்றி போலி பட்டா வழங்கி வருகின்றனர்.

பாண்டியன், விவசாய சங்க தலைவர்: 25 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட கரும்பு ரகம் நல்ல பலன் அளித்தது. அது 10 ஆண்டில் வீரியம் குறைந்து விடும். புதிய ரகம் கண்டுபிடிக்க வலியுறுத்தப்பட்டது.

நமது மண்ணுக்கு ஏற்ற ரகத்தினை சர்க்கரை ஆலை இன்னும் அறிமுகம் செய்யவில்லை. சர்க்கரை ஆலை நிர்வாகம் அறிமுகம் செய்த ரகத்தை பயிரிட்டதில் ஏக்கருக்கு 30 டன் தான் கிடைத்துள்ளது. எனவே, புதிய ரகம் அறிமுகம் செய்திட வேண்டும். மாவட்டத்தில் ஒரு சென்ட் இடத்தில் ஒருடன் மகசூல் எடுக்க கூடிய சூழல் உள்ளது. இணை இயக்குனர்:

விவசாயிகளுக்கு கருத்தரங்கு நடத்தி நல்ல வழிகாட்டப்படும். கண்ணன், விவசாய சங்க செயலாளர்: கரும்பு விவசாயிகளுக்கு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை எஞ்சிய விலை, லாபத்தில் பங்கு என ஒரு ஆண்டு மட்டும் கொடுத்தனர். இதுவரை பல ஆண்டுகளாக எஞ்சிய தொகை, மத்திய அரசு அறிவித்த தொகை வழங்கவில்லை. தேனி மாவட்டத்தில் ரூ.8 கோடி விவசாயிகளுக்கு வழங்க வேண்டியுள்ளது.

கரும்பு வெட்டி 75 நாட்களாக விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யவில்லை. விவசாயத்திற்கு அடமானம் வைத்த நகைகள் ஏலம் போகிறது. வருவாய் சட்டப்படி ஆலை மீது நடவடிக்கை எடுங்கள். கலெக்டர்: விவசாயிகளுக்கு குறைந்த பட்ச தொகை பட்டுவாடா செய்யுங்கள். என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என 2 வாரத்தில் பதில் கூற வேண்டும். விஜயலட்சுமி: நூறுநாள் வேலை திட்டத்திற்கு கூலி ஆட்கள் சென்று விடுவதால் விவசாயத்திற்கு ஆட்கள் கிடைக்காமல் விவசாயம் செய்ய முடியவில்லை. தேனி மாவட்டத்தில் வாரத்தில் 2 நாட்கள் மட்டும் வேலை கொடுங்கள். கலெக்டர்: நூறு நாள் வேலை திட்டத்தில் விவசாய பணிக்கு ஆட்களை அனுப்ப அரசு உத்தரவு உள்ளது. ஊராட்சி தலைவரிடம் கூறி வேலைக்கு ஆட்கள் பெறலாம். இவ்வாறு விவாதம் நடந்தது.

**நிலத்தடிநீர்மட்டம் உயர்வால் கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

தேவதானப்பட்டி: பெரியகுளம் தாலுகா கிராம பகுதியில் நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்துள்ளதால் விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் கடந்த ஆண்டை விட கரும்பு சாகுபடியின் பரப்பளவு அதிகரித்துள்ளது.

பெரியகுளம் தாலுகா, வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையின் மூலம் பொம்மிநாயக்கன்பட்டி, சிந்துவம்பட்டி, ரெங்கநாதபுரம், வாடிப்பட்டி, குள்ளப்புரம், சங்கரமூர்த்திபட்டி, முதலக்கம்பட்டி,

சர்க்கரைப்பட்டி, தாமரைக்குளம், வடுகபட்டி, எருமலைநாயக்கன்பட்டி, தேவதானப்பட்டி உட்பட 30 மேற்பட்ட கிராமங்களில் 500 ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுக்கு பிறகு கடந்த 2014 அக்டோபர், நவம்பரில் கனமழை பெய்தது. தொடர்ந்து நடப்பு ஆண்டு கடந்த ஏப்ரல், மே மாதங்களில் பருவமழை பெய்தது.

இதனால் சங்கரமூர்த்திபட்டி, முதலக்கம்பட்டி, ஜெயமங்கலம் உட்பட பல கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் தரையின் மேல் பகுதியை தொட்டது. பல கிராமங்களில் விவசாய கிணறுகளில் நீர் ஊற்று கிடைத்துள்ளது. தற்போது பெரியகுளம் தாலுகா பகுதியியில் கரும்பு சாகுபடியில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். 500 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே இருந்த கரும்பு சாகுபடி தற்போது 3 மடங்கு அதிகரித்து 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிற்கு அதிகரித்துள்ளது.

சர்க்கரை ஆலை நிர்வாகிகள் கூறியதாவது:

கூடுதல் விளைச்சல் தரக்கூடிய புதியரக முழு விதைப்பு கரும்புகள் பிறபகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவருகிறது.

ஆலை மூலம் விவசாயிகளுக்கு முன்பணம் தரப்படுகிறது. வங்கிகள் மூலம் உடனடியாக கடன்வசதி ஏற்படுத்திக்கொடுக்கின்றோம். மூன்று ஆண்டுக்கு பிறகு கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர், என்றார்.

**உள்நாட்டில் விலை உயர்வை தடுக்க வெங்காய ஏற்றுமதிக்கு புதிய கட்டுப்பாடு மத்திய அரசு நடவடிக்கை**



புதுடெல்லி

இந்தியாவில் வெங்காய உற்பத்தி 2014–15–ம் ஆண்டில் கணிசமாக குறைந்திருப்பதால், உள்நாட்டில் வெங்காயத்தின் மொத்த விலை கடந்த ஒரு மாதமாக அதிகரிக்க தொடங்கி உள்ளது. ஆசியாவின் மிகப்பெரிய வெங்காய சந்தையான மராட்டிய மாநில லசலாகோன் சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் மொத்த விலை ரூ.11–லிருந்து ரூ.17 வரை உயர்ந்துள்ளது.

நாட்டில் தற்போது பருவமழை தொடங்கி உள்ளதால், ஈரப்பதம் காரணமாக வெங்காயத்துக்கு பெருத்த சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் மேலும் விலை அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

எனவே உள்நாட்டு சந்தையில் வெங்காய விலை உயர்வை தடுப்பதற்காகவும், தட்டுப்பாடு இன்றி கிடைப்பதற்கு வசதியாகவும், வெங்காய ஏற்றுமதியில் புதிய கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்து உள்ளது.

அதன்படி வெங்காய ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 250 டாலரில் (சுமார் ரூ.15 ஆயிரம்) இருந்து 425 டாலராக (சுமார் ரூ.26 ஆயிரம்) மத்திய அரசு உயர்த்தி உள்ளது. இந்த விலை உயர்வு உடனே அமலுக்கு வருவதாகவும், இதற்கு குறைவான விலையில் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதியை அனுமதிக்க முடியாது எனவும் வெளிநாட்டு வர்த்தக இயக்குனரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டு உள்ளது.

**காவிரி டெல்டா பகுதியை வறட்சி பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு போதுமான இழப்பீட்டை அரசு வழங்க வேண்டும் மு.க.ஸ்டாலின் அறிக்கை**



சென்னை,

காவிரி டெல்டா பகுதியை வறட்சி பகுதியாக அறிவித்து, விவசாயிகளுக்கு போதுமான இழப்பீட்டை வழங்க வேண்டும் என்று முகநூலில் மு.க.ஸ்டாலின் கருத்து வெளியிட்டுள்ளார்.

போதுமான நீர் சேமிப்பு

இதுகுறித்து தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் தனது முகநூலில் வெளியிட்ட கருத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:-

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி

பாசனத்துக்காக, ஜூன் 12-ந் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும். இந்த ஆண்டு நீர் பற்றாக்குறையால் அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படாது என்று முதல்-அமைச்சர் அறிக்கை வெளியிட்டார். இதன் மூலம் அ.தி.மு.க. அரசின் அராஜக மனப்பான்மை மீண்டும் அரங்கேறியுள்ளது. அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால ஆட்சியில் 2001 மற்றும் 2011-ம் ஆண்டுகளில் இரண்டு முறை மட்டுமே உரிய காலத்தில் பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு முறையும் கூட, தி.மு.க அரசு மேட்டூர் அணையில் போதுமான நீர் சேமிப்பை முந்தைய ஆட்சியின் போது ஏற்பாடு செய்திருந்ததே காரணம். போதுமான இழப்பீடு ஆனால் ஜெயலலிதாவுக்கு 'பொன்னியின் செல்வி' எனும் பட்டத்தை அளித்த காவிரி டெல்டா விவசாயிகள் இன்று கண்ணீரில் உள்ளனர். கடலூர் மற்றும் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் தங்களுடைய அவல நிலையை விரக்தியுடன் வெளிப்படுத்தி எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். வரவிருக்கும் குறுவை சாகுபடி தவறுகின்ற காரணத்தால் கடுமையான வறுமை மற்றும் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, காவிரி டெல்டா பகுதிகளை வறட்சியால் வாடும் பகுதிகளாக அறிவித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநில அரசு போதுமான இழப்பீடு வழங்க வேண்டும். இது தவிர, காவிரி பிரச்சினையில் சுமுகமான நிலை ஏற்பட மாநில அரசு, கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது மிகவும் முக்கியமானது. வஞ்சித்து விட்ட அரசு மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத மோசமான நிலையை உருவாக்கியது அ.தி.மு.க. அரசின் மிகப்பெரிய நிர்வாக தோல்வியை காட்டுகிறது. காவிரி இறுதி தீர்ப்பை அரசிதழில் அறிவித்ததை அ.தி.மு.க. அரசு கொண்டாடிய அதே நேரம், இந்த அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவுமில்லை, அதற்கான முயற்சி எதையும் எடுக்கவுமில்லை.

அரசிதழில் வெளியிடப்பட்ட இறுதி தீர்ப்பின்படி தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசிடம் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி எதுவும் எடுக்கவுமில்லை. நீர் பகிர்வு மீதான முடிவை எட்டுவதற்கு காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது மிகவும் அவசியமானது. இப்படியான முக்கிய பிரச்சினையில் மவுனம் காத்து தமிழக அரசு மீண்டும் ஒரு முறை விவசாயிகளுக்கு துரோகம் இழைத்துள்ளது பெரும் கவலைக்குரியது. தமிழக அரசு விவசாயிகளை வஞ்சித்து விட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக பசுந்தாள் பயிரிடலாம் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரி அறிவுரை**




தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக பசுந்தாள் பயிரிடலாம் என்று விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை அதிகாரி அறிவுரை வழங்கி உள்ளார். விவசாயிகள் ஆர்வம்

பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய பகுதியில் சாகுபடி பரப்பளவு 13 ஆயிரத்து 718 ஹெக்டேர் ஆகும். மற்ற பயிர்களை விட தென்னை சாகுபடியில் அதிக வருமானம் கிடைக்கிறது. தென்னையில் தேங்காய் தவிர உரிமட்டை, சிரட்டை, தென்னை ஓலை ஆகியவற்றின் மூலமும் லாபம் பெறலாம். மற்ற பயிர்களை விட வேலை ஆட்கள் குறைவாக தேவைப்படுவது உள்பட பல்வேறு காரணங்களால் தென்னை

சாகுபடியில் ஈடுபட விவசாயிகள் அதிகம் விரும்புகின்றனர். தெற்கு ஒன்றியத்தை பொறுத்தவரையில் தென் மேற்கு பருவமழை சராசரியாக 412 மி.மீ பெய்ய வேண்டும். ஆனால் 2013-ம் ஆண்டு 461 மி.மீ. பெய்துள்ளது. மழை அளவு அதிகமாக இருந்தாலும், சீராக பெய்யவில்லை. ஒரே நேரத்தில் மொத்தமாக பெய்து விடுகின்றது. விதைப்பு பருவத்திலோ அல்லது அறுவடை நேரங்களில் அதிகமழை பெய்து பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. மழை அளவு மொத்த மழை அளவில் 2013-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் 189 மி.மீ. மழையும், 2014-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 254 மி.மீ. மழையும் பெய்து உள்ளது. விட்டு, விட்டு பரவலாக மழை பெய்தால் தான் பயிர் சாகுபடிக்கு ஏற்றதாக அமையும். கோவை வேளாண்மை பல்கலைக்கழக வானிலை ஆய்வு மையம் மாவட்டத்தில் 2015-ம் ஆண்டிற்கான தென்மேற்கு பருவமழை சராசரியாக 192.9 மி.மீ. பெய்யும் என்று அறிவித்து உள்ளது. இதில் 165 மி.மீ. மழை அளவு எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து தெற்கு ஒன்றிய வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் பெருமாள்சாமி, கூறியதாவது:- தெற்கு ஒன்றியத்தில் தென்னை விவசாயத்தில் ஈடுபட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். இங்கு இந்த மாதம் 96.4 மி.மீ. மழை பெய்துள்ளது. பருவமழையை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு உரமிடுதல் நல்லது. தென்னைக்கு உயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். ஒரு மரத்திற்கு ஆண்டிற்கு 200 கிராம் வீதம் கலந்து மரத்தை சுற்றி 3 அடி சுற்றளவில் ½ அடி ஆழத்தில் வட்ட பாத்தி அமைத்து உயிர் உரங்கள் இட வேண்டும். இதையே பாதியாக பிரித்து 6 மாதத்திற்கு அரை வட்டப்பாத்தி அமைத்து இட வேண்டும். உயிர் உரம் இடும் போது ரசாயன உரத்தை கலக்க கூடாது. பசுந்தாள் உரம் பின்னர் 30 நாள் இடைவெளியில் தென்னை நுண்ணூட்டம் இட

வேண்டும். ரசாயன உரத்தை பயன்படுத்துவதாக இருந்தால் ஒரு மரத்திற்கு ஆண்டிற்கு 1.30 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை கலந்து இட வேண்டும். தென்னந்தோப்பில் மரங் களுக்கு இடையே தழைச்சத்து அதிகரிக்க சணப்பை, தக்கை பூண்டு போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை ஊடுபயிர்களாக பயிரிடலாம். பசுந்தாள் உரப்பயிர்கள் காற்றில் உள்ள நைட்ரஜனை எடுத்து வேர் முடிச்சுகளில் சேகரித்து நிலத்திற்கு தழைச்சத்தை அதிகரிக்கின்றன. பயிர் வளர்ச்சிக்கு தழைச்சத்து அவசியமாகும். இவ்வாறு அவர் கூறினார்.

**திருமருகல் பகுதியில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரம்**



திருமருகல் ஒன்றியத்தில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆண்டு தோறும் மேட்டூர் அணை விவசாயத்திற்காக ஜூன் 12-ந்தேதி திறப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு தண்ணீர் போதிய அளவு இல்லாததால் அணை இதுவரை திறக்கவில்லை. இதையடுத்து தமிழக அரசு விவசாயிகள் மோட்டார் தண்ணீர் மூலம் விவசாயம் செய்ய இலவச மும்முனை மின்சாரத்தை பயன்படுத்தி கொள்ளலாம் என அறிவித்தது. அதன்படி திருமருகல் ஒன்றியத்தில் திருமருகல், திருச்சங்காட்டன்குடி, போலகம், கரையிருப்பு,

திருப்புகளூர் ஆகிய பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் குறுவை சாகுபடி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

**கோழிப்பண்ணைகளில் கிருமி நாசினி மருந்துகளை உபயோகப்படுத்த வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளி யிடப்பட்டு உள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:- அடுத்த 4 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 4 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு முறையே 15, 15, 15, 15 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 96.8 டிகிரியாகவும், குறைந்த பட்சமாக 78.8 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 77, 78, 78, 80 சதவீதமாகவும், குறைந்த பட்சமாக 58, 55, 56, 57 சதவீதமாகவும் இருக்கும். தென்மேற்கு பருவமழையின் தாக்கத்தால் காற்றின் வேகம் மட்டுமே அதிகரித்து வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும் என்பதால்

பகல் வெப்ப அளவு இயல்பிற்கு சற்றே உயர்ந்து காணப்படும். கோழிகளிடையே தீவன எடுப்பு இயல்பாக இருப்பதை போன்ற நிலை காணப்பட்டாலும். காற்றின் வேகம் காரணமாக தீவன விரயத்தால் அவ்வாறு உள்ளதா என கவனித்து அதற்கேற்றாற்போல் காற்றின் வேகத்தை கட்டுப்படுத்தும் முயற்சியான உயர்மனைகளில் பக்கவாட்டில் படுதாவை கட்டி சரி செய்ய வேண்டும். சூரியகாந்தி புண்ணாக்கில் அக்ரா நச்சின் அளவு அதிகரித்து காணப்படுவதால் அதன் உபயோகத்தில் கவனம் தேவை.

கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் ஈகோலை மற்றும் நாள்பட்ட சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டு இறந்து இருப்பது தெரியவந்து உள்ளது. எனவே பண்ணை யாளர்கள் கோழிப்பண்ணைகள் மற்றும் குடிநீரில் ஈகோலை கிருமிகள் உள்ள னவா என இந்த ஆய்வகத்தில் ஆய்வு செய்து அதற்கேற்றார் போல் கால் நடை மருத்துவரின் ஆலோசனையின்படி கிருமி நாசினி மருந்துகளை குடிநீர் மற்றும் கோழிப்பண்ணைகளில் உபயோகப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள உளுந்து பயிர்கள் உரிய விலை கிடைக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு**



கபிஸ்தலம் பகுதியில் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள உளுந்து பயிர்களுக்கு உரிய விலை கிடைக்குமா என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். உளுந்து பயிர் சாகுபடி கபிஸ்தலம் பகுதியில் வீரமாங்குடி, சோமேஸ்வரபுரம், மணலூர்,

தேவன்குடி, பட்டுக்குடி, ஆடுதுறை, உள்ளிக்கடை, பெருமாள் கோவில், கருப்பூர், சருக்கை, இளங்கார்குடி, நாயக்கார்பேட்டை மற்றும் மேலகபிஸ்தலம், ராமானுஜபுரம், சத்தியமங்கலம், வாழ்க்கை, உமையாள்புரம், அண்டக்குடி, அலவந்திபுரம், மருத்துவகுடி, ஓலைப்பாடி, பொன்பேத்தி உள்பட 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கோடை சாகுபடியாக உளுந்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உளுந்து பயிர் மீது அதிக ஆர்வம் கொண்டு விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்துள்ளனர். தற்போது அந்த பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. தரமான உளுந்து ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை விலை போகிறது. இது இன்னும் அதிக விலைக்கு போக வேண்டும் என்றும், பர்மா உள்ளிட்ட வெளி இடங்களில் இருந்து உளுந்து இறக்குமதி செய்வதை குறைத்து உள்நாட்டில் பயிர் செய்துள்ள உளுந்துக்கு நல்ல விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**மல்லிகை வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.80க்கு விற்பனை**

கோவை, : முகூர்த்தம் குறவைாலும், பண்டிகை தினம் இல்லாததால் பூக்களின் விலை சரிந்துள்ளது. இதில் மல்லிகை மற்றும் சம்பங்கி பூ வரத்து அதிகரிப்பால் விலை வெகுவாக சரிந்துள்ளது. பிற மாவட்டங்களில் நிலவும் கோடை காரணமாக கோவை பூ மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைந்துள்ளது. கோவை பூ மொத்த மார்க்கெட்டில் நேற்றைய விலை விபரம் கிலோ அளவில்: செண்டுமல்லி (ஆரஞ்சு) ரூ.20, செண்டு மல்லி (மஞ்சள்) ரூ.10, செவ்வந்தி ரூ.80, ரோஜா சாதா 100 எண்ணிக்கை ரூ.40, இதர ரோஜா வகைகள் ரூ.80 - ரூ.100, சம்பங்கி ரூ.10, மல்லி ரூ.80 - 100, முல்லை ரூ.80 - ரூ.100, ஜாதிப்பூ ரூ.200, பட்டுப்பூ ரூ.50, அரளி ரூ.40, மருகு கட்டு ரூ.3, மரிக்கொழுந்து பெரிய கட்டு ரூ.20, துளசி பெரிய கட்டு ரூ.20.

கோவை மாவட்ட மலர் வியாபாரிகள் சங்கம் பொருளாளர் அய்யப்பன் கூறுகையில், 'தற்போது வரத்து குறைந்திருந்தாலும், இந்த மாதத்தில் சுப முகூர்த்தம் குறவைாக இருப்பதும், மற்றும் பண்டிகை தினங்கள் இல்லாததாலும் விற்பனை அதிகரிக்கவில்லை. விலை கடந்த மாதத்தை காட்டிலும் குறைந்துள்ளது. செண்டுமல்லி ஆரஞ்சு கிலோவிற்கு ரூ.20ம், முல்லை ரூ.100 வரையும் குறைந்துள்ளது. சம்பங்கி வரத்து அதிகரிப்பால் ரூ.150 வரையும் விலை குறைந்துள்ளது. மதுரையில் இருந்து மல்லிகை பூ வரத்து அதிகரிப்பால் ரூ.40 குறைந்துள்ளது' என்றார்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பருவமழை தீவிரம் : மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு**




மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 12 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து உள்ளது. இதனால் ஒகேனக்கல் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில், தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், அந்த மாநிலத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கர்நாடகா மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர், ஹேமாவதி, ஹேரங்கி உள்ளிட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

கடந்த 23ம் தேதி இரவு, கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் திறப்பு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. தற்போது கே.ஆர்.எஸ் அணையில் இருந்து வினாடிக்கு 12 ஆயிரம் கன அடி, கபினி அணையில் இருந்து வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி என மொத்தம் 22 ஆயிரம் கனஅடி உபரி நீர் காவிரியில் திறந்து விடப்பட்டுள்ளது. கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று முன்தினம் தமிழக

எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைந்தது. பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர் ஆணைய அதிகாரிகளின் கணக்கீட்டின்படி, நேற்று மாலை 4 மணி நிலவரப்படி ஒகேனக்கல் காவிரியில், வினாடிக்கு 14 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால், ஒகேனக்கல் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் நள்ளிரவில் ஒரு அடி உயரத்திற்கு நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. இதனிடையே கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்பட்ட உபரி நீர், நேற்று காலை மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. மேட்டூர் அணையில் நேற்று காலை 8 மணிக்கு வினாடிக்கு 1047 கனஅடியாக இருந்த நீர்வரத்து, மதியம் 12 மணியளவில் 10,386 கனஅடியாக உயர்ந்தது. தொடர்ந்து மாலை 4 மணியளவில், வினாடிக்கு 11,995 கனஅடி வீதம் நீர்வரத்து வந்து கொண்டிருந்தது. வழக்கமாக ஜூன் 12ம் தேதி, அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருந்தால், குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். ஆனால் நடப்பாண்டு நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாததால், தண்ணீர் திறப்பது தாமதமாகி வருகிறது. தற்போது கர்நாடகா அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நீர்வரத்து தொடர்ந்து இதே நிலையில் நீடித்தால், ஜூலை மாத இறுதிக்குள் தண்ணீர் திறப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக, பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 74.53 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 74.93 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1003 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையில் நீர் இருப்பு 37.08 டிஎம்சி.

**மரத்துடன் வளர்வோம்**

மனிதகுலத்துக்கு முன் தற்போதுள்ள மிகப்பெரிய சவால் புவிவெப்பமயமாதல். இப்பிரச்னைக்கு அடிப்படையாக பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பசுமைபோர்வை குறைந்து வருவதே மிக முக்கியமான பிரச்னையாகும். இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 30 சதவீதம் பகுதியை பசுமையாக்கும் வகையில் வனப் பகுதியை விரிவுபடுத்துதல், மரங்களை நடுதல் போன்ற நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் அடுத்தக்கட்டமாக ஒவ்வொருவரும் ஒரு மரத்தை நட வேண்டும் என்ற திட்டத்தை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி பள்ளியில் கேஜி வகுப்பில் சேரும் பிள்ளைகள் தங்களுடைய பள்ளி வளாகத்தில் விதைகளை அல்லது சிறு செடியை நட வேண்டும். கேஜி வகுப்பு முடியும்போது, அந்தச் செடியும் வளர்ந்திருக்கும். அதன்பிறகு அந்தச் செடியை தனது வீட்டிலோ அல்லது தன்னால் தினமும் பார்க்கக் கூடிய இடத்தில் அந்தச் செடியை நட்டு வளர்த்து வர வேண்டும். குழந்தைகள் வளரும்போது, இந்த செடியும் வளர்ந்து மரமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் மரத்துக்கும் அந்தக் குழந்தைக்கும் இடையே நல்ல நட்பு உருவாகும். ஒவ்வொரு பெற்றோரும் தனது குழந்தையின் வளர்ச்சியைக் கண்டு பூரிப்பு அடைவதுபோல், அந்தச் செடியின் வளர்ச்சியையும் ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் நாடு முழுவதும் மரங்கள் வளர்க்கும் பழக்கத்தை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இது நல்ல திட்டம்தான். ஆனாலும் தற்போது நகர்ப்புற வளர்ச்சியில், வீடுகள் அடுக்குமாடியாக மாறிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஆர்வம் இருந்தாலும் அதை செயல்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன.

இதற்கு மாற்று வழியாக ஒவ்வொரு பகுதியிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மரங்கள் நடுவதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும். சாலையோரங்களில் நடுவதற்கு அனுமதி அளிப்பது போன்றவற்றில் உள்ள சிக்கல்கள் அகற்றப்பட வேண்டும். எதற்கும் ஒரு நல்ல தொடக்கம் தேவை. அதன்படி பள்ளி மாணவர்கள் மூலம் தொடங்கும்போது, அந்தக் குடும்பத்தையும் இந்த திட்டத்தில் ஈடுபட வைக்க முடியும். இயற்கைக்கு எதிரான புவிவெப்பமயமாதல் போன்றவற்றை தடுப்பதுடன், மரங்களுடன் மனிதர்களுக்கு இருக்கும் பிடிப்பையும் ஆழமாக வளரச் செய்யலாம். இதன் மூலம் இயற்கையுடனான உறவு மேம்படும்.

**மேகி நூடுல்ஸ்சை தொடர்ந்து கே.எப்.சி சிக்கனில் டைபாய்டு கிருமிகள்**




புதுடெல்லி: நெஸ்லே நிறுவனத்தின் மேகி நூடுல்ஸ்சில் அளவுக்கு அதிகமாக காரீயம் உள்ளிட்ட ரசாயனங்கள் இருப்பதாக பல்வேறு மாநிலங்களில் நடத்தப்பட்ட சோதனையில் தெரியவந்தது. இதையடுத்து நாடு முழுவதும் மேகி நூடுல்ஸ்சுக்கு தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் காம்ப்ளான், டெட்டால் சோப் உள்ளிட்டவற்றிலும் நடத்தப்பட்ட தர பரிசோதனையில், அவை தரமற்றவையாக இருப்பதாக

புகார்கள் கூறப்பட்டன. தற்போது நூடுல்சைத் தொடர்ந்து அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட கேஎப்சி சிக்கன் சிக்கலில் சிக்கியுள்ளது.

இந்த நிறுவனத்தின் சிக்கன் உணவு வகைகளை ஆய்வு செய்த போது அதில் டைபாய்டு காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய 'சால்மோனெல்லா' வகை பாக்டீரியாக்கள் இருப்பது தெரியவந்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன. தெலங்கானா மாநிலத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையில் இது தெரியவந்தது. இதனால் மேகியை தொடர்ந்து தற்போது கேஎப்சி சிக்கனுக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் கே.எப்.சிக்கும் தடை வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனால் இந்த குற்றச்சாட்டில் உண்மையில்லை என்று கே.எப்.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

**அனைத்து பகுதிகளிலும் சராசரிக்கும் அதிகம் : நாடு முழுவதும் பருவமழை தீவிரம்**




மும்பை: நாடுமுழுவதும் பருவமழை தீவிரமடைந்துள்ளதால், அடுத்த இரு வாரங்களுக்கு மழை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் மேற்கு பருவமழை அனைத்து பகுதிகளிலும் சராசரிக்கும் அதிகமாக பெய்துள்ளதாக முதல் கட்ட அறிக்கையில்

தெரியவந்துள்ளது.

தென்மேற்கு பருவமழை வழக்கமாக ஜூன் 1ம் தேதி தொடங்கும். ஆனால், இந்த ஆண்டு சற்று தாமதமாக 5-ம் தேதி தொடங்கி, தற்போது தீவிரமடைந்துள்ளது. மேற்கு ராஜஸ்தான் பகுதியைத்தவிர நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் மழை பெய்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மிதக்கும் மாநிலங்கள்:

குறிப்பாக ஜம்மு-காஷ்மீர், குஜராத், கர்நாடகா, இமாச்சலப்பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் மழை வலுத்துள்ளது. பருவமழை தீவிரத்துக்கு குஜராத் மாநிலத்தில் மட்டும் இதுவரை 45-க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். கர்நாடகா மாநிலத்தில் பெய்துவரும் பலத்த மழையால், அங்குள்ள அனைத்து அணைகளும் நிரம்பிவருகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் பெய்துவரும் பேய்மழையால் ஜீலம் நதியில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் சென்றது. இதனால், குல்காம் மாவட்டம், அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள நயி பஸ்தி, தகியா பெஹராம்பூரா, சாம்ஷிரம்பூரா, ஹசன்பூரா ஆகிய பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

காஷ்மீரில் குறைந்தது : இந்நிலையில் தெற்குகாஷ்மீர் பகுதியில் பாய்ந்தோடும் ஜீலம் நதியில் 27 அடிவரை சென்ற வெள்ளநீர், நேற்று காலையில், 21 அடியாக குறைந்துள்ளதாக அந்த மாநில வெள்ளக்கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பருவமழை வலுக்கிறது: இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிவிப்பில், நாடுமுழுவதும் பருவமழை தீவிரமடைந்துள்ளது. இந்த மழை அடுத்த 2 வாரங்களுக்கு தொடரும். ஆனால், ஜூலை மாதத்தின்

நடுப்பகுதியில் மழை குறையத்தொடங்கும். அடுத்த 15 நாட்களில் நாட்டின் வடமேற்கு மற்றும் மத்திய பகுதியில் மழை படிப்படியாகக் குறையும். 9 ஆயிரம் பக்தர்கள் தவிப்பு:

உத்தரகாண்டில் பெய்து வரும் கனமழை காரணமாக மந்தாகினி ஆற்றில் வெள்ள நீர் அபாய அளவை தாண்டி ஓடத் தொடங்கியுள்ளது.இதுகுறித்து ருத்ரபிரயாகை கலெக்டர் ராகவ் லங்கெர் கூறுகையில், கேதார் நாத் செல்லும் முக்கிய வழியில் அமைந்துள்ள ஹேமகுந்த் பாலம் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு விட்டதால் கேதார்நாத் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளது. பத்ரிநாத் செல்லும் பாதையில் உள்ள முக்கிய 4 தடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால், 2-வது நாளாக பக்தர்கள் அனுமதிக்கப்படவில்லை. இதனால், 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பத்ரிநாத், ஹனுமன்சட்டி, படுகேஸ்வர், கோவிந்தாகாட் ஆகிய பகுதிகளில் தவிக்கின்றனர்.

பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி அணையில் தண்ணீர் திறப்புஉடுமலை, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் 7520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. இதன் மூலம் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் ஜூலை முதல் மார்ச் மாதம் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்றிலும், செப்டம்பர் முதல் ஜனவரி மாதம் வரை புதிய ஆயக்கட்டுக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும்.

தற்போது தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் கேரள மாநிலம் வனப்பகுதியில் இருந்து பாம்பாறு வழியாக அணைக்கு தண்ணீர் வருகிறது. அதேபோல் கொடைக்கானல், வால்பாறை பகுதியில் பெய்யும்

மழை நீரும் தேனாறு,சின்னாறு வழியாக அணைக்கு வருகிறது. 90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது 70 அடிக்கு தண்ணீர் இருக்கிறது.இதனால் பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் குறுவை நெல் சாகுபடிக்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.

மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் திறந்து வைத்தார். இந்த தண்ணீர் திறப்பால் கல்லாபுரம்,ராமகுளம்,குமரலிங்கம்,சர்க்கார் கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் 7520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். 10 நாள் திறப்பு,5 நாள் அடைப்பு என்ற ரீதியில் மொத்தம் 120 நாட்களுக்கு 1944 மில்லியன் கனஅடி தண்ணீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் நெல் சாகுபடி பணியை குதூகலமாக செய்து வருகிறார்கள். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் குழந்தைசாமி, உதவி செயற்பொறியாளர் தர்மன், இளம் பொறியாளர்கள் ஆறுமுகம், சண்முகம், ஜெயக்குமார், தாசில்தார் சைபுதீன், பாசன சங்க தலைவர்கள் சாமராயப்பட்டி ராஜ்குமார், பழனிச்சாமி, ராஜா, ராமசாமி, பாலு, தங்கவேலு உள்பட பலர் பங்கேற்றனர்.

உடுமலை, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் 7520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. இதன் மூலம் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. ஆண்டுதோறும் ஜூலை முதல் மார்ச் மாதம் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்றிலும், செப்டம்பர் முதல் ஜனவரி மாதம் வரை புதிய ஆயக்கட்டுக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்படும்.

தற்போது தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால் கேரள மாநிலம் வனப்பகுதியில் இருந்து பாம்பாறு வழியாக அணைக்கு தண்ணீர் வருகிறது. அதேபோல் கொடைக்கானல், வால்பாறை பகுதியில் பெய்யும் மழை நீரும் தேனாறு,சின்னாறு வழியாக அணைக்கு வருகிறது. 90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது 70 அடிக்கு தண்ணீர் இருக்கிறது.இதனால் பழைய ஆயக்கட்டு பாசன பகுதியில் குறுவை நெல் சாகுபடிக்காக நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.

மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் திறந்து வைத்தார். இந்த தண்ணீர் திறப்பால் கல்லாபுரம்,ராமகுளம்,குமரலிங்கம்,சர்க்கார் கண்ணாடிப்புத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் 7520 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். 10 நாள் திறப்பு,5 நாள் அடைப்பு என்ற ரீதியில் மொத்தம் 120 நாட்களுக்கு 1944 மில்லியன் கனஅடி தண்ணீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் நெல் சாகுபடி பணியை குதூகலமாக செய்து வருகிறார்கள். தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் செயற்பொறியாளர் குழந்தைசாமி, உதவி செயற்பொறியாளர் தர்மன், இளம் பொறியாளர்கள் ஆறுமுகம், சண்முகம், ஜெயக்குமார், தாசில்தார் சைபுதீன், பாசன சங்க தலைவர்கள் சாமராயப்பட்டி ராஜ்குமார், பழனிச்சாமி, ராஜா, ராமசாமி, பாலு, தங்கவேலு உள்பட பலர் பங்கேற்றனர்.

**வங்கி கணக்கு சமர்ப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

கொள்ளிடம், : குறுவை சிறப்பு திட்டத்தில் வங்கி கணக்கு சமர்ப்பிக்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கொள்ளிடம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: டெல்டா மாவட்டங்களுக்கு

அறிவிக்கப்பட்ட குறுவை சிறப்பு தொகுப்பு உதவித்திட்டத்தின் கீழ் காவிரி பாசன பகுதிகளில் நிலத்தடி நீரை பயன்படுத்தி அதிக பரப்பளவில் குறுவை சாகுபடி மேற்கொண்டு அதிக மகசூல் எடுக்க நெல் நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரங்களுக்கு ஆகும் செலவின தொகையை ஊக்க தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.315 வீதம், விவசாயிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்பட உள்ளது. இதனால் கொள்ளிடம் வட்டார குறுவை சாகுபடியாளர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கணக்கு எண், வங்கிக்குறியீட்டு எண், குறுவை சாகுபடி பரப்பு போன்ற விபரங்களுடன் சம்மந்தப்பட்ட பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு விபரம் அளிக்க வேண்டும். அல்லது கொள்ளிடம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்தில் கொடுத்தால், அதை ஆய்வு செய்து ஒரு வார காலத்திற்குள் அவரவர் வங்கிக்கணக்கில் பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். வேளாண் அலுவலர் கலியபெருமாள் 9943687686, உதவி வேளாண்அலுவலர்கள் சந்திரசேகர் கொள்ளிடம் 9047887546, மகேஷ் எருக்கூர் 9786370790, ராமச்சந்திரன் மாதிரவேளூர் 9443117093, கனகராஜ் கடவாசல் 9751610119, பாலச்சந்திரன் பழையபாளையம் 9588165501 ஆகிய கைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

**சத்தியமங்கலம் பகுதியில் விளையும் வாழைப்பழங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி**

சத்தியமங்கலம், . ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளான பவானிசாகர், தொட்டம்பாளையம், எரங்காட்டுர், பனையம்பள்ளி, புஞ்சைபுளியம்பட்டி, கொத்தமங்கலம், ராஜன்நகர், புதுவடவள்ளி, சிக்கரசம்பாளையம், கொண்டையம்பாளையம், கே.என்.பாளையம், தாண்டாம்பாளையம், செண்பகபுதூர், உக்கரம்,

பெரியூர் உள்ளிட்ட பல்வேறு கிராம விவசாயிகள் பணப்பயிரான வாழையை அதிகளவில் பயிரிடுகின்றனர். இப்பகுதியில் ஜி9, ரொபஸ்டா, கதலி மற்றும் ஆந்திர ரஸ்தாளி ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

12 மாத கால பயிரான வாழை சாகுபடி செய்ய ஒரு வாழை ஒன்று ரு.150 முதல் ரு.200 வரை செலவாகிறது. சாகுபடி செய்யப்படும் வாழைத்தார்களை வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து கேரளா, கர்நாடக மாநிலம் மைசூரு, பெங்களூரு, ஆந்திரமாநிலம் ஐதராபாத், சென்னை உள்ளிட்ட பல்வேறு பெருநகரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வந்தனர். உள்நாட்டில் வாழைத்தார் விற்பனை செய்வதால் போதிய லாபம் கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வந்தனர்.

இந்நிலையில், தேனி மாவட்டத்தில் விளையும் வாழைப்பழங்களை பாதுகாப்பாக பக்குவப்படுத்தி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதை அறிந்த விவசாயிகள் அங்கு நேரடியாக சென்று எவ்வாறு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது குறித்து நேரடியாக அறிந்து வந்தனர்.

தற்போது நன்கு திரட்சியடைந்த ஜி9 ரக வாழைத்தார்களை வெட்டி சீப்புகளாக தனித்தனியாக அறுத்து சுத்தமான நீரில் கழுவி 10 கிலோ அளவில் பாலிதீன் கவரில் பேக்கிங் செய்து குளிர்பதன வசதி செய்யப்பட்ட கன்டெய்னரில் லோடு ஏற்றுகின்றனர். தற்போது இந்த ரக வாழைப்பழங்கள் அரபுநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. இதன் மூலம் தார் ஒன்றுக்கு ரூ.350 முதல் ரூ.450 வரை விலை கிடைப்பதால் செலவு போக ஒரு தாருக்கு ரூ.200 வரை லாபம் கிடைக்கிறது. மேலும், வாழைத்தார்களை வெட்டி ஏற்றுமதி செய்வதற்கான பேக்கிங் செய்யும் பணிகளை வியாபாரிகளே ஏற்றுக்கொள்வதால் வெட்டுக்கூலி போன்ற செலவுகள் விவசாயிகளுக்கு இல்லை. இதனால் வாழை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் இழப்பீடு வழங்க ரூ.5.08 கோடி நிதி ஒதுக்கீடு**

ஈரோடு, : ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான விவசாயிகள் வேளாண் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடந்தது. இந்த கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகள் பதில் அளித்து பேசியதாவது: கவுந்தப்பாடி, சித்தோடு பகுதியில் விற்பனையாகும் நாட்டு சர்க்கரையினை பழனி தேவஸ்தானம் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு இந்து சமய அறநிலையத்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மத்திய அரசு மூலம் சக்தி சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு 30 கோடி ரூபாய் விரைவில் வழங்கப்படவுள்ளது. விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை இந்த நிதியில் இருந்து நேரடியாக விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படவுள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவுபடி ஆக்கிரமிப்பு அகற்றுவதற்காக வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு மாதந்தோறும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் குறித்து வரப்பெறும் மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென தனியாக பதிவேடும் பராமரிக்கப்பட்டு வருகிறது. வேளாண்மை விரிவாக்க மையங்களில் 416 மெட்ரிக் டன் தரச்சான்று பெற்ற நெல் விதைகளும், கூட்டுறவுதுறையில் 132 மெட்ரிக் டன் தரச்சான்று பெற்ற விதைகளும் இருப்பில் உள்ளது. பிச்சைக்காரன்பள்ளம் ஓடையில் வெளியாகும் 5 எம்.எல்.டி., கழிவுநீரை 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலமாக சுத்திகரிப்பு செய்து வெளியேற்றப்படும். கோபி நகராட்சி கழிவுநீர் கீரிப்பள்ளம் ஓடைக்கு கொண்டு வரப்பட்டு அங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றிட அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை கால்வாயில் கான்கிரீட் பணிகள்

முடிவடைந்தவுடன் ஆகஸ்ட் மாதத்தில் தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்யப்படும்.

விவசாயிகள் திண்டல் பகுதியில் கட்டப்பட்டுள்ள ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கில் மஞ்சளை இருப்பு வைத்துக் கொள்ளலாம். ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை நிலையத்திற்கு விவசாயிகள் மஞ்சளை கொண்டு வரும்போது அவர்களுக்கு டோக்கன் வழங்கப்படும். மஞ்சளின் எடை, விலை ஆகிய தகவல்கள் விவசாயிகளின் செல்போனுக்கு எஸ்எம்எஸ் மூலமாக அனுப்பி வைக்கப்படும். மேலும் விவசாயிகள் தங்களது வங்கி கணக்கை வழங்கினால் மஞ்சள் விற்பனைக்குரிய தொகை அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். இந்த வசதி இன்னும் 2 மாதங்களில் ஏற்படுத்தப்படவுள்ளது. மின்னணு சேவை திட்டத்தின் மூலமாக கூட்டுறவு துறையில் 171 மையங்களில் பட்டா, சிட்டா பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2012-13ம் ஆண்டு ராபி பருவம் மற்றும் 2013-14ம் ஆண்டு கரீப் பருவம் ஆகிய 2 பருவங்களுக்கு பயிர் காப்பீடு செய்த 7 ஆயிரத்து 851 விவசாயிகளுக்கு ரூ.5.08 கோடி பயிர் இழப்பீட்டு தொகை வரப்பெற்றுள்ளது. இந்த தொகை பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இவ்வாறு அதிகாரிகள் தரப்பில் பதில் அளித்து பேசினர். இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சதீஷ், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) விஸ்வநாதன் உட்பட அனைத்து துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.